விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 23 ஞாயிற்றுக்கிழமை (07.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 78

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## இலங்கையில் யுத்தக் குற்ற விசாரணை

## பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்க நிபுணர்கள் அடங்கிய குழு உருவாகும்

## இறுக்குகிறது ஐ.நா.; திணறுகிறது அரசு

(கொழும்பு)

இலங்கையின் கடப்பாடு மற்றும் பொறுப்புணர்வு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக்குழு ஒன்றை பிரேரிப்பதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை அமைப்பது குறித்து உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக பான் கீ மூன் இன் பேச்சாளர் மார்ட்டின் நிஸீர்கி தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள், பாரபட்சமான நடவடிக்கைகள் மற்றும் கடந்த பெப்ரவரியில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நாவின் உயர் மட்ட அரசியல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாய் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் திருமதி பார்வதி வேலுப்பிள்ளை நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடு ஒன்றுக்குப் பயணமாகியுள்ளார்.

சுகவீனம் மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் அத்தோடு அவரின் பிள்ளைகள் இந்தியா, டென்மார்க் மற்றும் கனடாவில் வசிப்பதாலும் அவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை செல்லும் ஈழத் தமிழரை கியூப் பொலிஸார் துருவுகின்றனர்

(சென்னை)

சென்னைக்கு விமானம் மூலம் செல்லும் ஈழத் தமிழர்களின் விபரங்கள் கியூப் பிரிவுப் பொலிஸாரால் இரகசியமாகச் சேகரிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாகச் சென்னை விமான நிலையத்தில், இந்தியாவில் அவர்கள் எங்கு தங்கப் போகின்றார்கள் என்ற படிவத்தை நிரப்பிக் கொடுக்க வேண்டும்.

அப்படிவத்தை வைத்து அவர்கள் செல்ல இருக்கும் உறவினர்களின் வீடுகள் கண்காணிக்கப்படுவதாகவும் பின்னர் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் அகதிகள் கடந்த வருடம் மே மாதத்திற்குப் பின்னர் இந்தியா வந்திருந்தால் அவர்கள் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## கூட்டமைப்பின் கோரிக்கையை அரசு நிராகரித்தது- திவயின

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதென திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூன் இலங்கையில் நியாயமின்றி தலையிடுகின்றார்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீற்றம்

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் தனக்கு ஆலோசன்னை வழங்குவதற்காக நிபுணர்கள் குழுவ்வை நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ள நிலையில்,

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நா. செயலரைக் கடுமையாக விமர்சித்துள்ளார். இவ்வாறான குழுவொன்றின் நியமனம் ஆனது அதற்கு எதிராக இலங்கையை அவசியமானதும் பொருத்தமானதுமான நடவடிக்கை எடுப்பதற்குத் தள்ளும் செயல் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலப் பகுதியில் இடம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சரத்திற்கு எதிராக 31 பேர் சாட்சி

(கொழும்பு)


ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குத் தேவையான 31 பேரின் சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சாட்சியங்க (16 ஆம் பக்கம் பார்க்க)





காரைநகர் மணற்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் நேற்றைய ஆறாம் திருவிழாவிற்கு திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் தென்பகுதியிலிருந்து யானை ஒன்று அழைத்துவரப்பட்டது. அழைத்துவரப்பட்ட யானையை திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆலயத்தில் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# சரத் மீது இராணுவ விசாரணை ஊடகங்களுக்கு தகவல் இல்லை

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பாக இராணுவ நீதிமன்றத்தில் நடத்தப்படும் வழக்கு விசாரணைகளின் தகவல்கள் ஊடகங்களுக்கு வழங்கப்படமாட்டாது என இர்ராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் போது ஊடகங்கள் அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார். அரசாங்கத்தைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பொன்சேகா கடற்படைத் தலைமையகத்தின் குடிமனையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக விசாரணைகள் இராணுவச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எனவும் அந்த சட்டத்தின் பிரகாரம் ஊடகங்களுக்கு அவை குறித்த தகவல்கள் வழங்கப்படமாட்டாது எனவும் பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# எதிர்க்கட்சித் தலைவர்களை நிருபமா ராவ் சந்திப்பார்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் இலங்கையின் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிருபமா ராவ், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் நிருபமாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் என்ன விடயம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது என்பது தொடர்பில் அவர் கருத்து வெளியிடவில்லை.

அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்று நிருபமா இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். (ந-5)

# நாடு கடந்த தமிழீழ அரசின் யாப்பை மக்கள் பிரதிநிதிகளே எழுதுவார்கள்

## இணைப்பாளர் உருத்திரகுமாரன் தெரிவிப்பு

(றொறன்ரோ)

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளே நாடு கடந்த அரசுக்கான யாப்பினை எழுதுவார்கள். அவர்களுக்கே இதனை எழுதுவதற்கான மக்கள் ஆணை இருக்கும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் சர்வதேச இணைப்பாளர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே எழுதப்பட்ட யாப்பை மேலிருந்து திணிப்பதைவிட இதுவே பலநாடுகளும் ஏற்றுக்கொண்ட வழமை எனவும் யாப்பை எழுதுவதற்குச் சட்ட வல்லுநர்கள் தமது சட்ட நிபுணத்துவத்தை வழங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு கடந்த அரசின் கடைச்செயற்குழுவினர், தமிழ் ஸ்ரார் வானொலி ஊடாக நடத்திய நிகழ்ச்சிக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு கடந்த அரசின் முதலாவது செயலமர்வினை எதிர்வரும் மே மாதம் 17 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தமிழரின் உரிமைப் போர் முடியவில்லை என்பதை உணர்த்தும் குறியீடாகவே இந்தத்திகதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதுவரை 5 நாடுகளுக்கான செயற்குழுக்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி நாடுகளுக்கான செயற்குழுக்கள் இன்னும் 2 வாரங்களுக்குள் அமைக்கப்படும்.

நாடு கடந்த அரசு வெளிநாடுகளில் செயற்படுவதற்குச் சட்டரீதியான எந்தச் சிக்கலும் இருக்காது. ஒன்று கூடும் உரிமை ஐ.நாவின் மனித உரிமை சாசனத்திலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது.

நாடு கடந்த அரசு குறித்து சர்வதேச ராஜ தந்திரிகளும் தமது கருத்துக்களை தெரிவிக்க ஆரம்பித்துள்ளதுடன் இது குறித்து கூடிய அக்கறை எடுப்பதையும் நல்ல அறிகுறியாகக் கருதுவதாகக் குறிப்பிட்ட உருத்திரகுமாரன், சிங்கள தேசமும் இந் நாடு கடந்த அரசு குறித்து அச்சம் அடைந்துள்ளதை அவர்களிடமிருந்துவரும் அறிக்கைகள் தெளிவுபடுத்துவதாகவும் தெரிவித்தார்.

நாடு கடந்த அரசின் வெற்றி என்பது தமிழர்களின் ஒத்துழைப்பான முயற்சியில் தங்கியிருக்கின்றது என்பதை வலியுறுத்திய அவர், சிறிய பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபட்டுசெயற்பட வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தினார். அத்துடன் நாடு கடந்த அரசானது ஒவ்வொரு நாடுகளிலும் இயங்கிவரும் அந்தந்த நாடுகளின் தாயகம் சார்ந்த அமைப்புகளைப் பலவீனப்படுத்தாது எனவும் அனைவரும் ஓரணியில் பயணிக்க வேண்டும் என்றும் உருத்திரகுமாரன் கேட்டுக்கொண்டார். (ந-5)


## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 31,33,36,39 வயது, Canada Citizen 32,34,37 வயது, Germany Citizen 33 வயது, Holand Citizen 36 வயது, Austerliya Citizen 34 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்

T.P No. 0044 7535384166
0044 7508295863

Fax No: 0044 2086720673
wwwayngaranwedding@yahoo.com

(C-4617)

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna. Head Office 385, Galle Road, Colombo-06.
T.P.:021-222-4459, 0774192275 Fax: 222-4460

## COMPUTER CLASSES

**Diploma in Hardware Technology**

*Computer Assembling, Maintenance, Repairing*
*Software Installation, Internet Connection*

என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
(Only 20 Classes, Course Fees 3000/-)
அதிகூடிய செய்முறைப் பயிற்சி.
சான்றிதழ்கள் அனைத்தும் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.

**10 STUDENTS IN A BATCH**

(தொழில் புரிபவர்களுக்கான விஷேட நேர வகுப்புகளும் நடைபெறவுள்ளது)

(C-4618)

தரம் 3 முதல் 7 வரையான மாணவர்களுக்கு
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## சாரதி தேவை

I. கயஸ் வான்
II. 350 எல்வ் (350 ELF)

செலுத்தக் கூடியவர்கள்.
வயது 25க்கு மேல். 3வருட அனுபவம். சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0777768835
0777729547

(சி-4615)

## விற்பனைக்கு

கந்தரோடை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குப் பின்னால் 12 பரப்பு வயற் காணியும், அருளானந்தம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் குடாரை வயற்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776660532
(மாலை 5 மணிக்குப்பின்)
98, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(846)



## மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

**கங்காதரன் சாஸ்திரி**
**077 0712537**

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

**இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்**

121 A, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(847)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்.


## சர்வதேச மகளிர் தினம்-மார்ச்-08

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, பிராந்திய சுகாதாரப்பணிமனை யாழ்ப்பாணம் என்பன இணைந்து அமைதிப் பேரணி நிகழ்வினை கச்சேரி முன்பாக ஆரம்பித்து யாழ். நகரத்தில் முடிவுபெறும் வகையில் முன்னெடுக்கவுள்ளது. இந் நிகழ்வில் 'பூரணத்துவம்மிக்க பெண்ணை உருவாக்குவதனூடாக பால்நிலை சமத்துவத்தை பேணுவோம்' என்ற கருப்பொருளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 2010இன் கருப்பொருளாக கொண்டு செயற்படுவதை நோக்காக கொண்டு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைப்பதுடன், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கர், திரு.உதய டி சில்வா, H.Q.I யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது என்பதை செயற்பாட்டுக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் 'பூரணத்துவம்மிக்க பெண்ணை உருவாக்குவதனூடாக பால்நிலை சமத்துவத்தை பேணுவோம்' என்ற கருப்பொருளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 2010இன் கருப்பொருளாக கொண்டு செயற்படுவதை நோக்காக கொண்டு நடைபெறவுள்ளது. இவ் முன்னெடுப்பில் சமூக அங்கத்தவர் எல்லோரும் பங்களிப்பை வெளிப்படுத்துமாறு நிகழ்வின் இணைப்பாளர் கேட்டுள்ளார்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு,
யாழ்ப்பாணம்.

# அரச சார்பற்ற நிறுவனங்களை கண்காணிக்க விசேட குழு

(கொழும்பு)

உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் கண்காணித்து விசாரணை செய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு முரணான வகையில் நிதிச் சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அவை தொடர்பான முழுமையாக ஆராயப்படும் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது. (2-6)

# வாக்களிப்பதற்கு அனுமதிகோரி 50 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தமக்கு அனுமதிகள் வழங்குமாறு கோரி 50 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் செயலகத்தின் மூத்த பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; தமது பிரதேசங்களில் இருந்து அதிக தொலைவில் வாக்களிப்பு நிலையங்களில் உள்ள மக்கள் தமக்கு வாக்களிக்கும் வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

புத்தளம், அநுராதபுரம், குருநாகல், களுத்துறை, கம்பகா, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களே இந்த விண்ணப்பங்களை மேற்கொண்டுள்ளனர். ஆனால் இந்த விண்ணப்பங்களுக்கான முடிவுக் காலம் கடந்த மாதம் 26ஆம் திகதியுடன் நிறைவுபெற்றுவிட்டது.

எனினும் அவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு வாக்களிப்பு நிலையங்கள் அறிவிக்கப்படும். ஆனால் கிராம சேவையாளரின் அத்தாட்சிப் பத்திரம் இல்லாது மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)


## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

# KURDISTAN

## குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL இல்

# உடனடி வேலை வாய்ப்பு

வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை இம்மாத நடுப்பகுதியில் கொழும்பில் உள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.
நேர்முகப் பரீட்சை திகதி பின் அறிவிக்கப்படும்.

## CLEANERS - கிளினேர்ஸ்.

மேலதிகமாக 100 வெற்றிடங்கள் உள்ளன.

இரு தொகுதியினர் (Two Batches) தற்பொழுது விசா பெற்று ERBIL நாட்டுக்கு பயணமாகி பணியில் ஈடுபட்டுள்ளனர்.
மறு தொகுதியினருக்கு (Third Batch) தற்பொழுது விசா வந்துள்ளது என்பதையும் தெருவித்துக் கொள்ளுகின்றோம்.

மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

**MONTHLY SALARY - US$ 250/-**
**(S.L.Rs.28,750/=)+ O.T Available.**

❋ தங்குமிட வசதி இலவசம் ❋ உணவு இலவசம் ❋ மருத்துவ வசதி இலவசம்.
❋ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).
வயது: 21+ தொடக்கம் 32 வரை.

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது **MR.R.Guna** (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யவும்.
மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

**Terms & Conditions**

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

★ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.★
இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு

# TRANSSTAR.

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)
**Tel: 011 - 2 386 824 Mobile: 077-826 3228**

S.L.Bureau Labour Licence : 1311.
S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.

(Near Hulftsdorp Courts - Colombo)
(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)
(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)


# பயங்கரவாதத்துக்கு உயிரூட்ட மேற்குலக நாடுகள் முனைப்பு

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

நவநீதம்பிள்ளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக ஜே.என். பி. யின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துக்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய போது நவநீதம்பிள்ளை இலங்கை யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண் டும் என தெரிவித்திருந்தார்.

பிணமாகக் கிடக்கும் பயங்கரவாதத்திற்கு உயிர் ஊட்ட நவநீதம்பிள்ளை மற்றும் சில மேற்குலக நாடுகள் முனைப்புக்காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக வெளிநாட்டு சக்திகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்த தேசப்பற்றாளர்கள் அணி திரள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## இணைய பாவனைக்கு அடிமையான பெற்றோர்; பட்டினியால் 3 மாத சிசு பரிதாப மரணம்

# தென்கொரியாவில் சம்பவம்

தென்கொரியாவில் இணைய பாவனைக்கு அடிமையான பெற்றோரினால் மூன்று மாத சிசு ஒன்று பட்டினி மரணத்தை எதிர்நோக்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிக நீண்ட நேரம் இணைய பாவனைக்கு அடிமையான குறித்த பெற்றோர் சிசுவிற்கு உரிய முறையில் உணவு அளிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மூன்று மாதக் குழந்தை பட்டினியால் அதாவது உரிய முறையில் உணவு வழங்கப்படாத காரணத்தினால் உயிரிழந்துள்ளது.

பெற்றோர்கள் இணைய விளையாட்டு ஒன்றில் வரும் பிள்ளை ஒன்றை மாயையாக பராமரிப்பதில் அதிக ஆர்வம் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த மூன்று மாத குழந்தைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை மட்டுமே உணவு அளிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தொழில்வாய்ப்புக்களை இழந்த காரணத்தினால் மன உளைச்சலுக்கு உள்ளான குறித்த பெற்றோர் இயல்பு வாழ்க்கைக்கு புறம்பான வகையில் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தென்கொரிய தலைநகர் சியோலுக்கு தென்பகுதியில் அமைந்துள்ள நகரமொன் றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (2-6)

# தென்மராட்சியில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் அட்டைகள் மீளாய்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாதாந்த உதவி பெறுவோருக்கான மீளாய்வு நடவடிக்கைகள் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் J/313 மட்டுவில் வடக்கிற்கு நாளை திங்கட்கிழமையும் J/321 மீசாலை வடக்கிற்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் J/312, 311 மட்டுவில் நுணாவில், நுணாவில் மத்திக்கு எதிர்வரும் 11 ஆம் திகதியும், J/317 சரசாலை வடக்கிற்கு எதிர்வரும் 12 ஆம் திகதியும், J/305 கல்வயல் பிரிவுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதியும், J/327 கொடிகாமம் மத்திக்கு எதிர்வரும் 16 ஆம் திகதியும் J/336, 335 மிருசுவில் வடக்கு, தெற்கு எதிர்வரும் 18 ஆம் திகதியும் , J/316 சரசாலை தெற்கு எதிர்வரும் 19 ஆம் திகதியிலும் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

மேலும் , J/346 மந்துவில் மேற்கிற்கு எதிர்வரும் 22 ஆம் திகதியும் J/338, 343 நாவற்குழி, வரணி இயற்றாலைக்கு எதிர்வரும் 23 ஆம் திகதியும், J/339 மாசேரி மற்றும் J/339 வரணி வடக்கு ஆகிய பிரிவுக்கு எதிர்வரும் 25 ஆம்திகதியும் , J/344 தாவளையற்றாலை பிரிவுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதியும் மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் மீளாய்வுக்காக வருவோர் மாதாந்த உதவிப்பணம் பெறும்அட்டை, குடும்பப் பங்கீட்டு அட்டை ஆகியவற்றை கொண்டுவருமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (6-4-29)

# ஓய்வு மண்டபம் அமைத்து தருமாறு அல்லைப்பிட்டி மீனவர் கோரிக்கை

(வேலணை)

அல்லைப்பிட்டி பகுதியில் (பண்ணை கடலில்) கடற்றொழில் செய்து வரும் மீனவர்கள் தமக்கு ஓர் ஓய்வு மண்டபமின்றி பலத்த சிரமங்களை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அதாவது அல்லைப்பிட்டி பண்ணை கடலில் கடற்றொழில் செய்வோர் யாழ் நகரை அண்டிய பகுதியிலும் ஆனைக்கோட்டை, சங்கரத்தை போன்ற பகுதிகளிலிருந்துதான் வந்து தமது தொழிலை செய்து வருகின்றனர்.

இதனால் தமது தொழில் உபகரணங்களை பாதுகாப்பதற்கு ஏற்ற இடமில்லாமல் தம்முடன் எடுத்து செல்வதுண்டு. இதேபோல் தாம் தொழில் முடிந்த பின்பு மீன்களை தெரிவு செய்வது எல்லாம் வெட்டவெளியில் தான். மேலும் தாம் நீண்ட தூரத்திலிருந்து தொழில் செய்வதாலும் தமக்கு இப்பகுதியில் கட்டடங்கள் எதுவும் இல்லாமையாலும் இரவு வேளைகளில் கடற்கரையிலேயே இருந்துவிட்டு அதிகாலையில் தொழில் செய்ய புறப்படுவதாகவும் தமது நிலையை கருத்திலெடுத்து உரியவர்கள் அல்லைப்பிட்டி பகுதியில் ஓர் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-22)

# மீள்குடியேறிய குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் விநியோகம்

(பொன்னாலை)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து வலி மேற்குப் பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு கூரைத் தகரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இக்கூரைத் தகரங்கள் பிரதேச செயலகத்திலிருந்து எடுத்து வரப்பட்டு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பணிமனைகளில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்பட்டு வரும் கூரைத் தகரங்களைக் கொண்டு மீள்குடியேறிய மக்கள் தற்காலிக வீடுகளை அமைத்து குடியேறி வருவதை அவதானிக்க முடிகின்றது. (6-49)

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(பொன்னாலை)

மூளாய் - முன்கோடை காளிகோவில் வீதி கடந்த பல வருடங்களாக புனரமைக்கப் படாமல் இருந்து வருகிறது.

இதனால் இவ்வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதியைப் புனரமைத்து தருமாறு வலி மேற்குப் பிரதேச சபை, வலி மேற்கு பிரதேச செயலகம் ஆகியவற்றிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்து வந்தபோதும் இதுவரை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (6-49)

# இராசி பலன்

07-03-2010
(மாசி 23, ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி பிற்பகல் 2.18 மணிவரை
அனுசம் பிற்பகல் 2.14 மணிவரை
இராகுகாலம் 4.55- 6.25 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
மூன்றாம் தவக்கால ஞாயிறு.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத மனஸ்தாபம், போசன சுகம், வாகனபயம், தொழில் நன்மை. |
| இடபம் | அபூர்வசந்திப்பு, தொழில்சிந்தை, பிரயாண சுகம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | பணவருவாய், ஆரோக்கிய நிலை, சத்துரு ஜெயம், நல்ல முயற்சி. |
| கடகம் | காரிய இடையூறு, மரியாதைக் குறைவு, தனவிரயம், குடும்பக் கவலை. |
| சிங்கம் | ரோகபயம், தொழில்சிந்தை, உறவினர் சந்திப்பு, புதிய முயற்சி. |
| கன்னி | கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், புதிய பொருள் சேர்க்கை, வாகன சுகம். |
| துலாம் | எடுத்தகாரியம் தாமதமாகும், தன விரயம், வீண்பகை, ரோகநிலை. |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, உறவினர் வருகை, போசன சுகம், தேகநலன். |
| தனுசு | சகோதரர் உதவி, பிரயாணம், சுப செலவு, சயனசுகக் குறைவு. |
| மகரம் | குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், கீர்த்தி, விருந்துபசாரம். |
| கும்பம் | அதிகாரம், தொழில் சிந்தை, போசன சுகம், இனிய செய்தி. |
| மீனம் | புதியதிட்டமிடல், தந்தை வழி உறவு. பிரயாணம், தனவிரயம். |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## பாம்பும் பணமும்

"நேற்றைக்கு அந்தத் தெரு முனையில 'வித்தைக்காட்டிக் கொண்டிருந்தவர் நீங்கதானே!"

"அடியேன் தான்!"

அது எப்படி? காசு-பணத்தையெல்லாம் வாங்கி வாயில் போட்டு விழுங்குறீங்க... பின் அதையெல்லாம் வெளியே எடுக்கிறீங்க?"

"இதோ இருக்கே, இது வயிறு இல்லீங்க... வங்கி! இதில் பணம் போடலாம். எடுக்கலாம். இப்ப ஒரு ரூபாய் கொடுங்களேன்... காட்டுகிறேன்."

"இந்தாங்க"

"இப்ப பாருங்க,வாயில போடுறன். ம்... விழுங்கி விட்டேன். உங்கள் பணத்தை வங்கியில் போட்டாச்சு!"

"ஆகா..."

இப்ப எடுக்கிறன் பாருங்க. ம்... இந்தாங்க!"

"என்னங்க இது? ஒரு ரூபாய் தானே கொடுத்தேன். இரண்டு ரூபாய் வந்திருக்கு?"

"நான் சொன்னேன் தானே இது வங்கி என்று. அதுதான் வட்டியோட வந்திருக்கு. இந்தாங்க வைச்சிருங்க."

"தாங்ஸ்! நான் கூட பேப்பரில் ஒரு செய்தி படிச்சேன்?"

"என்ன படிச்சீங்க?"

"மலேசியாவில் ஓர் ஆளைப் பாம்பு கடித்து விட்டதாம். உடனே அவருக்குக் கோபம் வந்து அந்தப் பாம்பைப் பிடித்து விழுங்கிவிட்டாராம். அதன் பின் வயிறு வலித்திருக்கிறது. ஆஸ்பத்திரிக்குப் போய் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் 12 அங்குல பாம்பு வயிற்றில் இருந்ததாம்."

"உயிரோடவா?"

"இல்லை... செத்துப் போய்?"

"அதுதானே பார்த்தேன்! நான் உயிரோடு எடுத்துவிடுவேன்"

"உங்கள் சாமர்த்தியம் யாருக்கும் வராதுங்க... இன்னொரு உதவி..."

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க!"

"ஒரு ரூபாய் கொடுத்தேன்,இரண்டு ரூபாய் வந்தது. இந்தாங்க நூறு ரூபாய். இதை விழுங்குங்க. என்ன வருகிறது பார்ப்போம்".

"ஓ... பேஷா! குடுங்க,ம்... விழுங்கியாச்சு!"

"என்னங்க இது? ஏப்பம் வருகுது. பணம் என்னாச்சு?"

"அதை பிக்ஸ்ட் டிபோசிற்றில் போட்டச்சு!".

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | கல்வியங்காடு ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 70 | 90 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 100 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 35 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கரணைக்கிழங்கு | -- | -- | 40 |
| பயிற்றங்காய் | -- | -- | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 60 | 70 | 70 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 |
| போஞ்சி | 60 | 80 | 90 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | -- | -- | 30 |

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 28

செய்யுளை அடுத்தும் அதன் விளக்கமாகவும் சொல்லப்படும் பகுதியிற் பல விவரங்கள், செய்யுளில் இல்லாத விவரங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றிலொன்று கலிங்கம், வங்கம், சிங்கபுரம் என்பவற்




றிலிருந்து அவனது காலத்திலே மட்டக்களப்பிற்குக் குடிகள் வந்தன பற்றியதாகும். மற்றொன்று சேனனின் சந்ததியினர் ஆண் வழியில் நான்கு தலைமுறைகளாக மட்டக்களப்பினை ஆட்சி புரிந்தமை பற்றிய செய்தியாகும். அவை எவ்வளவிற்கு ஆதாரபூர்வமானவை என்பதை அறியுமாறில்லை. அவை புனைகதைகள் போலவே தோன்றுகின்றன.

சேனன் சரித்திரத்தைக் கவனிக்கும் பொழுது பூர்வீகம் பற்றிய மரபொன்று உருவாகி வளர்ச்சிபெற்று வந்துள்ளமையினை அது பிரதிபலிக்கின்றது என்று கொள்ளலாம். முற்காலங்களில் மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய பிரதேச தலைவர்களைப்பற்றிய சுருங்கிய விபரங்கள் செய்யுள் வடிவிலே அமைக்கப்பட்டிருந்தன. அவை நாட்டார் பாங்கிலான செவி வழிப் பாடல்களாகவும் அமைந்திருத்தல் கூடும். காலப்போக்கில் அவற்றுடன் ஜனரஞ்சகமான முறையிலே புனைகதை கள் பல சங்கமமாகிவிட்டன. வரலாற்றுச் செய்தியும் கற்பனைக் கதைகளுஞ் கலந்துவிட்ட ஒரு நிலையை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் பிரதிபலிக்கின்றது.

குணசிங்கன் சரித்திரம் என்னும் பகுதியிலுள்ள விடயங்களை இச்சந்தர்ப் பத்திலே கவனிப்பது பொருத்தமானதாகும். அதிலே செய்யுளொன்று அதன் விளக்கமான வசனநடைப் பகுதியும் மேல்வருமாறு அமைந்துள்ளன.

உலகுள்ளோர் புகழ்ந்து வாழ்ந்த உற்றவர்
விழுந்து போற்றத்
தலைவனாய் எழுந்து மட்டக்களப் பினில்
இருந்தகாலம்
கலைவளர் கலியுதித்து மூவாயிரத்தைந்
நூறு கடந்த காலம்
புலவர்கள் பாடச் செய்கோலோச் சினான்
புரவலன்றான்


**மண்முனைக் குடியேற்றம்: உலகநாச்சி கொக்கட்டிச்சோலைக் கோயில்**




## மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

குணசிங்கன் மட்டக்களப்பைக் கலி பிறந்து மூவாயிரத்து ஐந்நூறாம் வருடம் பரிபாலித்து வரும் காலம் கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரியும் குகனேசனுடைய புத்திரி உலக நாச்சி என்பவள் கௌதம புத்தருடைய தசனத்தை எடுத்து நெடுங் கூந்லுக்குள் மறைவாய் வைத்துக் கைலயங்கிரியிற் குகவம்சத்தார் முன் காலத்தில் வைத்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலகநாதனிடமும் தனது தந்தை குகனேசனனிடமும் விடைபெற்று வர்த்தகருடையபடகிலேறி மணிபுரத்திலிறங்கி விசய துவீபத்தில் வந்து மேகவண்ணனைக் கண்டு குலங் கோத்திர மெல்லாம் விளங்கப்படுத்திப் புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள்.

மேகவண்ணனும் புத்த மதத்துக்கு இனி அபாய மில்லை யென்று அதிக சந்தோசங்கொண்டு உல கநாச்சியை நோக்கி உமக்கு வேண்டிய தைக் கேளுமென்றும் உலகநாச்சியும் அரசனை இந்த இலங்கையில் காடுசெறிந்து குடிவாழ்வில்லாத கிராமமொன்றீயும்படி வேண்டினாள். அதைக் கேட்ட மேகவண்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது சிநேகித னாதலால் ஒரு திருமுகம் வரைந்து அதில் உமது மட்டக்களப்பு உன்னரசகிரி இவை களில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்று இந்த உலகநாச்சிக்கு கைலஞ் சமாய் ஈந்து கொடுக்கும்படி வேண்டி உலகநாச்சிக்குக் கொடுக்கும் உபகாரங்க ளையும் இரத்தின மாலையையும் கொடுத் து மட்டக்களப்புக்கு அனுப்பிவைத் தான்..... குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து சந்ததியுரிமை கொண்டாடி மட்டக்களப்புக்கு வடபாகமாயுள்ள அம்பலாந்துறைக் கப்பால் மன்னேறிமுனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ் வற்ற பகுதியை நிந்த மாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித்தூர்த்து மாளிகை உண்டாக்கி உலகநாச்சிக்கீய உலக நாச்சியும் குடி வாழ்ந்து சில காலம் சென்றபின் தனது தம்பி சிவ நாதனைத் தந்தையிடத்திலனுப்பிக் குகன் குடும்பம் நூற்றாறும் சிறைக்குடும்பம் முப் பதும் எடுப்பித்துக் குடும்பங்களைத் தன் அருகாயிருத்தி இந்த இடத்தில் ஆலய மாற்றிச் சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தனர். பின்பு இன்னும் ஒரிசா நகரமிருந்து அநேக குகக் குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டை அழித் துச் செப்பனிட்டுக் குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி மண்முனையென நாமஞ்சூட்டி வாழுங்காலம் களப்பு முனைக் குத் தென்பாகமாயுள்ள காட்டை அழிப்பிக்கும்போது திடகன் என் பவன் கொக்குநெட்டி மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்தது. அதைக்





கண்டதிடகன் தனது உடைத் துணியால் மரத்து வெட்டுவா யைக் கட்டிவைத்துப்போட்டு உலக நாச்சியிடத்தில் வந்து இந்தச் செய்திகளை அறிவித்தான்.

உலக நாச்சியும் அந்த இடத்தில் போய்ப் பார்க்கும்போது அந்த கொக்குநெட்டி மரத்தடியில் ஒரு லிங்கமிருந்தது.

மறுபேர்கள் கண் ணுக்குப் புலப்படாதபடியால் உலக நாச்சியும் சிவலிங்கமெனத் திட் டம் பண்ணி அவ்வனத்தை அழிப்பித்து தூசிநீக்கி ஆலயமியற்றி வடநாட்டுக் கொல்லிடத்திலிருந்து பட்டர் மூவரை அழைத் துப் பூசை புரியும் படி திட்டஞ்செய்து அதிக கழனிகள் திருத்திக் குணசிங்க னுடன் பிறந்தானாகிய கிரசன் என்ப வனை மணந்து ஒரு புத் திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்ந்து வருங் காலம் தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக் கும்

**பேராசிரியர்**
**சி.பத்மநாதன்**

குடிகள் பதின்மரை அழைத்து தனது குடிக்கருகாயிருத்திப் பத்தனென்ப வனை அவர்களுக்குத் தலை வனாய் வைத்து இரண்டு ஆலயத்துக்கும் ஆரங்கட் டுங் குடிகளாக வகுத்தனன். (தொடரும்)

# கடல் வழிச் சட்டவிரோத குடியேற்றங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள்

## கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் முன்னெடுப்பு

(கொழும்பு)


கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோதக் குடியேற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கிறது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள கடல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்தார்.

கடற்றொழிலைப் பாதுகாப்பது மற்றும் கடல்வழிச் சட்டவிரோதக் குடியேற்றங்களைத் த்டுப்பது என்பவற்றுக்காகவே இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றங்களால் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதாகவும் முன்னர் அதிகளவானோர் கடல் மார்க்கமாக இத்தாலி நாட்டுக்குச் சென்றனர் எனினும் தற்போது அவுஸ்திரேலிய நாட்டுக்குச் செல்வதாக அவர் தெரிவித்தார்.

கடற்பரப்பில் நடைபெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், கடலில் நிர்க்கதியாவோரையும் அனர்த்தங்களை எதிர்கொள்வோரையும் காப்பாற்றுவதற்கும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தற்போது காலியிலும் கொழும்பிலும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள திணைக்களம் இவ் வருடத்தில் ஒலுவில், கற்பிட்டி, கண்டக்குளி, திருகோணமலை, பருத்தித்துறை, மன்னார், பூநகரி ஆகிய இடங்களிலும் கடல் பாதுகாப்பு முகாம்களை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (2-6)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் வரணி மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இதில் லயன்ஸ் கழக செயலர் கே.நடராசா வித்தியாலய அதிபரிடம் மரக்க்ன்றுகளை வழங்குவதையும், அருகில் கழக அங்கத்தவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஓமர்றும் வரை
சாராயம் அரைப்போத்தல்
பேயைச் சரிக்கட்டக்
கோழிச்சாவல்
நண்டு கணவாய்க்கறி...
நாலஞ்சு முட்டைப் பொரியல்...
கொண்டுவந்தால் போதும்
பேயைக் கொழுவி விடலாம்
சுடலைமரத்தில்

குறிசொல்பவன்
"கலையில்"
கூத்தாடியபடி கூற
அஞ்ஞான இருளிலிருந்து
ஆவலாய்க் கேட்கிறது
ஒரு கூட்டம்.

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

### அன்பு
பெற்றோர்களின் மனம்
வட்டமிட்டு - பிள்ளைகளின்
அன்பில் உயிர்வாழ்கிறது

ப.கிசோக்

### உறவு
மலர்ந்த பூக்கள் மடியும் என்று
மலரும் பூக்கள் நினைப்பதில்லை
சேர்ந்த உறவுகள் பிரியும் என்று
சேரும் உறவுகள்
நினைப்பதில்லை
பிரிவுகள் தற்செயலானவை
உறவுகள் நிரந்தரமானவை

துவாரகா தயாளன்
நீர்வேலி

### உயிர் கொல்லி
மரணங்கள் மலிந்த பூமியிது
என்பதால்தான்
நீயும் எம்வாசல்
தேடி வந்திருக்கின்றாயா?
உயிர்கொல்லியாய்
இனியும் பொறுக்கமாட்டோம்
டெங்கே
நீ தங்குமிடங்களை
இல்லாதொழித்திடுவோம்
உன் சந்ததியை!



பொலிகை கேசி

### பெண்ணே புரிந்து கொள்!
(மகளிர் தினச் சிறப்புக் கவிதை)

பெண்ணே!
புரிந்து கொள்வாயா?
எதையும் தாங்கும் இதயம்
உனக்கு என்று உணர்வாயா?
அன்று முதல் இன்று வரை
பெண்ணுக்கு சுதந்திரமில்லையென்று
உன்னை நீயே சிறுமைப்படுத்துகிறாய்
மென்மையானவள் நீயென்று கூறி
மலருக்கு உன்னை ஒப்பிடும்
ஆண்கள் மத்தியில் பெண்ணே
நீ நாணல் போல் வளையலாமா?
ஏதோ புகழ்கிறார்கள் என்று
உனக்குள் இருக்கும் சக்தியை
திறமைகளை நீ இழக்கலாமா?
பெண்ணே! நீ நெருப்பு என்று கூறி
அன்பு கொண்ட உறவுகளை
உன்னிடமிருந்து தூரப்படுத்துகிறார்கள்
உண்மை தெரியாத
பெண்ணே! நாகரிகம்
என்று உன்னை
மாற்றியமைக்கும் சமுதாயத்தை
புரிந்து கொண்டு உன்வழி
நட பெண்ணே!
இது தான் உண்மையென்று
புரிந்து கொள் பெண்ணே.

செல்வி சற்குணசிங்கம் நளாஜினி
மயிலணி, சுன்னாகம்.

### மறுமலர்ச்சி
என் நினைவுகளில்
உன் நிம்மதியற்ற
நிராசைகளை
நினைக்கும் போது
மலர்மீது விழுந்த
பனித்துளிபோல
மறக்கமுடியவில்லை
உன் ஞாபகங்களை
மறுமலர்ச்சி வந்து
மலர்ந்து தீர்க்காதோ
என்(உன்) சோகம்!

ரீ.நீலா (புனர்வாழ்வு நிலையம் கைதடி)

### இமயம் தொட...
சலிப்புக் கொள்ளாதே
அன்று எடிசன்
சலிப்புக் கொண்டிருந்தால்
உலகமே இன்று
இருளில்தான் இருந்திருக்கும்
செயலில் தெளிவுகொள்
சரிவுகள் கண்டு
சோர்ந்து விடாதே
செயல்படு
வெற்றி நிச்சயம்


மாவை. நா.கஜேந்திரா

### புதுமைப்பெண்
(மகளிர் தினச் சிறப்புக் கவிதை)

எறும்பைப் பிடித்து
அதனையோர் ஈட்டியாக்கி
அடிமை செய்வோன்
இதயம் உடைத்து...
எறிந்து.... புதுப்புது
புயல்களால் தினம் தினம்
நிமிர்ந்து நில்லடி! அடிமை செய்
ஆடவர் வீரத்தோள் – எனும்
கோழைத்தோளினை!
அடியோடு சாய்த்திட
இன்னுமோர் இன்னுமோர்
இடிமின்னல் கொட்டடி!
தண்டவாளம் பிடுங்கி
தினம் தினம் வதை செய்
உன்னவர் எனினும் அவரவர்
தலை கொய்ய புதுப்புது
ஆயுதம் ஒன்றேனும் கொண்டுவா!!
உன் அழுகையோர்
ஆயுதக் காலமெல்லாம்
நிழலாகத் தரை மீது காணடி!
எழுந்து நில்!
நிமிர்ந்து செல்!
கடிந்து சொல்!
நாளையேனும் – உன்
அடிமை விலங்குடைத்து!..
உனை அடைக்கலம்
செய்வேன்!.

பொலிகையூர்
சுனந்தன்.

# மௌனத்தின் தேடல் – 09




### வாக்குப்பெட்டி
உன்னுள் தம் விருப்புக்களை
பதிவு செய்கின்றனர் மக்கள்
ஆனால் அரசியல்வாதிகளோ
உன்னையே மாற்றிவிடுகின்றனர்
தங்கள் சுயலாபத்துக்காக...!

வல்வையூர்
நிலாரசிகன்

### பூட்டு
வீடுகளுக்குத்தான்
பூட்டு என்றால்
உரிமையைக் காட்டும்
பெட்டிக்குமா பூட்டு
இல்லையேல் ஏற்கனவே
நிரம்பியுள்ளதால்
பூட்டப்பட்டுள்ளதா
இப்பெட்டி

பா.சிவாஜினி
கெருடாவில்

### ஓட்டை உண்டியல்
சனநாயகம் ம(மி)திக்கப்படுகின்ற
நம் தேசம் தன்னில்
தேர்தல் உற்சவத்தில்
மேடையேறி மின்னி முழங்கி
ஆசை வார்த்தைதனை
அள்ளி வீசும் அரசியல் மேதைகளின்
வேஷக் கோலம் அறியாத
மக்களிடம் வாய்விட்டு
வோட்டுப்பிச்சை சேர்க்கும்
ஓட்டை உண்டியல்

சந்நிதி கயா

### ஜனநாயகம்
ஜனநாயகம்
ஜடமாகிப்போனதால்
பூட்டிய வாக்குப்
பெட்டிக்குள்ளும்
புகுந்துகொண்டு
இடம்மாறிப் போகின்றன
புள்ளடிகள்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### உணர்வுகளின் சங்கமம்
உறங்கும் வாக்குப் பெட்டிக்குள்
உறங்கிக் கிடப்பது
வெறும் வாக்குச் சீட்டுக்களல்ல!
ஒட்டுமொத்த மக்களின்
ஏதோபித்த உணர்வுகளின்
சங்கமம்

செ.ரவிசாந்
குப்பிளான்

பூட்டென்ன பூட்டு
மோசடியாளர்களுக்கு
வாக்குச்சீட்டும் விதிவிலக்கல்ல

எஸ். கனிமொழி
பருத்தித்துறை

### மூச்சிழந்த வாக்குப் பெட்டி
பொய்யான பெயரில் பெட்டி
மெய்யான மக்கள் தோல்வி
வாக்கிலே சுத்தம் இல்லை
வாக்குப் பெட்டிக்கு
வடிவம் எதற்கு
தீர்வுகள் கிடைப்பதில்லை
தினமும் அழுகையில் மக்கள்
நடந்தது தேர்தல்
சோகமே எமக்குள் இன்று

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி

### மௌனம்
வன்னி யுத்தத்தில்
ஜனநாயகம் மடிந்தபோது
நீ மௌனமானாய்...
ஜனநாயகம் உன்னால்
உயிர் பெறும்போது
மக்கள் மௌனமானார்கள்

ஜீவா
புனர்வாழ்வு நிலையம் கைதடி

வாக்குப் பெட்டியே!
வாக்காளர் வாழ்வில்
வசந்தம் வீசுமா
வாக்குக் கொடுத்தோர்
வார்த்தையைக் காப்பாரா?
அன்றில் இவை
வாய்சாடலுடன் முடியுமா!

அ.ம.ஜெயரத்தினம்
நெல்லியடி கிழக்கு

பெட்டியும் பூட்டும்
உறுதியாக.
இடம்மாறியது
சீட்டுக்கள்

தரங்கனி
தேக்கவத்தை

### வாக்கு
மனிதர்களே!
இந்த வாக்குப்
பெட்டிக்குள்
விழும்
வாக்குகளால்
மட்டும்
இனங்காண
முடியும்
அரசியல்
வேடதாரிகளை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### எட்டாக்கனி
மக்களின்
விருப்போ வெறுப்போ
உன் பிரதிபலிப்பு
எதிர்நோக்கிக்
காத்திருக்கும்
வேட்பாளருக்கு
நீயொரு...

து.சுரேந்திரன்
யாழ்ப்பாணம்

பூட்டிய பெட்டிக்குள் போடுவது
எமது வாக்கையல்ல...
எமது வாழ்வின் உரிமையை

ஜெ.பிரேம்
வயாவிளான்

### அடகுப் பெட்டி
அரசியல் வாதிகளுக்கு இது
கனவுப்பெட்டி
மக்களுக்கு உரிமைகளை
அடகுவைக்கும் பெட்டி
தோற்றவர்களுக்கு ஆசைகளை
அடக்கம் செய்யும் பெட்டி
வென்றவர்களுக்கு – அதிஸ்டப்பெட்டி
தனியாகப் போட்டியிடுவோரிற்கு
விளம்பரப்பெட்டி
வாக்குப் பிரிக்கப் போட்டியிடுவோரிற்கு
சூதாட்டப்பெட்டி
தேர்தல் திணைக்களத்திற்கு
சுமையான பெட்டி
கறையான் பூச்சிகளுக்கு
சுவையான பெட்டி

பா.பாலச்சந்திரன்
மயிலணி

சங்குநாதம்

# மௌனத்தின் தேடல்- 10



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.03.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# நாடு கடத்தப்பட்ட இலங்கையர் தொடர்பில் அவுஸ்திரேலிய மருத்துவர்கள் அதிருப்தி

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டமை தொடர்பில் அந்நாட்டு மருத்துவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். 69 வயதான எட்வர்ட் ஜோசப் என்பவரே இவ்வாறு நேற்று முன்தினம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

எனினும் 92 வயதான அவரது தாயாரை கவனித்துக் கொள்வதற்கு ஜோசப்பிற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எட்வர்ட் ஜோசப் புகலிடம் கோரி விண்ணப்பித்த பல கோரிக்கைகளை அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நிராகரித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதற்கு ஜோசப்பிற்கு எவ்வித சட்ட அந்தஸ்தும் கிடையாது என அந்நாட்டு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இதன்படி ஜோசப் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நோயுற்றிருக்கும் 92 வயதான அயரின் ஜோசப் என்ற அவரது தாயாரை கவனித்துக்கொள்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் திடீரென தனது மகனது கவனிப்பை இழந்தால் அயரின் ஜோசப் உடல் மற்றும் உளநிலை பாதிக்கப்படக்கூடுமென மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் மனிதாபிமான அடிப்படையில் ஜோசப்பிற்கு புகலிடம் வழங்கியிருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு எட்வர்ட் ஜோசப் புகலிடம் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஜோசப்பின் ஏனைய பிள்ளைகள் அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதாகவும் அவர்களினால் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவுஸ்திரேலிய அரசாங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-6)

# பணமோசடி செய்தவருக்கு 11 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி 11 பேரிடமிருந்து 8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை பெற்று மோசடி செய்த போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவருக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் 11 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்தார்.

முறைப்பாட்டுக்காரர்களிடமிருந்து சந்தேக நபர் பெற்றுக்கொண்ட பணத்தை உடனடியாக திருப்பி செலுத்துமாறு உத்தரவிட்ட பிரதம நீதிவான் சம்பா ஜானகி ராஜரத்ன தவறினால் மேலும் 11 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி சந்தேக நபர் முறைப்பாட்டுக்காரர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 80 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# தமது கட்சியின் ஆதரவாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)



சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். தமது கட்சியின் ஆதரவாளர்கள் பல்வேறு வழிகளில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு பொலிஸ்மா அதிபரோ அல்லது உயரதிகாரிகளோ எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் தமக்கு தமது ஆதரவாளர்களுக்கும் எதிராக அரசியல் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதாக முறைப்பாடுகள் செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களினால் பல்வேறு வன்முறைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படாத நிலையில் அநேகமான பொலிஸ் அதிகாரிகள் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளதாகவே சந்தேகிக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக மாத்தறை மாவட்டத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் தமது முறைப்பாடுகள் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (2-6)

# விரைவில் காற்றாலை மூலமான மின்சக்தி உற்பத்தி நடவடிக்கை

## மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

காற்றாலைகளால் உற்பத்தி செய்யப்படும் 30 மெகாவோட் மின்சாரத்தை எதிர்வரும் 6 மாதகாலத்துள் தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இயற்கை எரிசக்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாம்புரி மற்றும் கற்பிட்டி மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக இந்த 30 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்சாரத் கட்டமைப்பில் இணைக்க முடியுமென அமைச்சு தெரிவித்தது.


இதில் மாம்புரி நிலையத்தில் 10 மெகாவோட்டும் கற்பிட்டி நிலையத்தினூடாக 20 மெகாவோட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2645 மெகாவோட் மின்சாரத்தைக் கொண்ட தேசிய மின் சக்திக் கட்டமைப்பில் காற்றாலை மின்சக்தியாக தற்போது 3 மெகாவோட் மின்சாரம் மட்டுமே அடங்கியுள்ளது. இந்த அளவை 100 மெகாவோட்டாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயற்கை எரிசக்தித் திட்டத்தின் கீழ் காற்று, சூரியசக்தி , குப்பை கூழங்கள், சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 400 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் ஆரம்பிக்க ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும் இதில் 159 திட்டங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறுகிறது. (2-6)

BOC
BANK OF CEYLON
ලංකා බැංකුව இலங்கை வங்கி
திருடர்களிடமிருந்து உங்கள் பெறுமதிமிக்க பொருட்களைப் பாதுகாக்க...
மிகச் சொற்ப அளவே கையிருப்பில் உண்டு
இலங்கை வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்கள்
தொடர்புகளுக்கு:-
பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
அதிமேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம்.
(சி.4611)

# சோனியா-மன்மோகன் கருத்து வேறுபாடு
## டில்லி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு





(புதுடில்லி)

தகவல் அறியும் உரிமை சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பான விவகாரத்தில் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டது. குறிப்பாக தலைமை நீதிபதியைத் தகவல் அறியும் உரிமை சட்டம் கட்டுப்படுத்தாது. அரசின் கொள்கை முடிவுகளை வெளிப்படையாக விவாதிக்க முடியாது என்பது உள்ளிட்ட விடயங்களில் திருத்தம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. இதற்கு காங்கிரஸ் தலைவர் சோனியா எதிர்ப்புத் தெரிவித்தார்.

இது தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு முன் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு சோனியா எழுதிய கடிதத்தில்; அரசு சாரா அமைப்புக்கள் போன்றவை இதில் திருத்தம் செய்வதை விரும்பவில்லை. எனவே தற்போதுள்ள சட்டமே தொடர வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதற்கு பிரதமர் மன்மோகன்சிங் தற்போது பதில் அளித்து கடிதம் எழுதியுள்ளார். அதில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதே நேரத்தில் திருத்தம் செய்வதற்கு முன் இது குறித்து சம்பந்தப்பட்டோரிடம் ஆலோசனை நடத்தப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் பிரதமருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு டில்லி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2-4-6)

# இந்திய அரசை கைப்பற்ற மாவோயிஸ்ட்கள் சதித் திட்டம்

(புதுடில்லி)

வரும் 2050ஆம் ஆண்டிற்குள் அரசை கைப்பற்ற மாவோயிஸ்ட்கள் திட்டமிட்டுள்ளனர் என மத்திய உள்துறைச் செயலர் கோபாலகிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

டில்லியில் இந்தியாவில் இடதுசாரிகள் தீவிரவாதம் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது; வரும் 2050ஆம் ஆண்டிற்குள் இந்திய அரசைக் கைப்பற்ற வேண்டும் என மாவோயிஸ்ட்கள் திட்டமிட்டுள்ளனர். சமீபத்தில் அவர்கள் விநியோகித்த புத்தகங்களில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கள் ஆயுதப் பலத்தால் இந்திய பொருளாதாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்து வருகின்றனர்.

எந்த நாட்டு ஆயுதங்களையும் கையாள்வதற்கும் எதிர்கொள்வதற்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்குப் பின்னணியில் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் உள்ளனர். மாஜி இராணுவத்தினரும் இந்த இயக்கத்தில் இருப்பது அவர்கள் ஆயுதங்களைக் கையாளும் திறனில் இருந்து அறிய முடிகிறது.

இரண்டொரு ஆண்டுகளில் இந்தியாவை வீழ்த்திவிட முடியாது என்பதை அவர்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். எனவேதான் படிப்படியாக தங்கள் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு முறை தாக்குதல் நடந்து முடிந்ததும் நிலைமையை நன்றாக ஆய்வு செய்கின்றனர். அடுத்த தாக்குதலின்போது முந்தைய தாக்குதலில் நடந்த தவறு நடந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-4-6)

# இந்திய எல்லைக்குள் இலங்கை மீனவர் கைது

(இராமேஸ்வரம்)

நாகபட்டினம் கடல் பகுதியில் இந்திய கடலோர காவல் படையினர் ரோந்து சென்றனர். அப்போது இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து இலங்கை மீனவர்கள் ஒரு படகில் மீன்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

உடனே கடலோர காவல் படையினர் விரைந்து சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த 6 மீனவர்களைக் கைது செய்து படகையும் பறிமுதல் செய்தனர்.

கைதானவர்கள் இலங்கை மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த துஷந்தா உபுவலோ (33), ரவீந்திர (29), சுஜித் (30), உதயசிகா (27), கமிர உதயங்கா (23), மகேஷ் இரங்க (20) என்பது விசாரணையில் தெரியவந்தது. அவர்களை கடலோர காவல் படையினர் மண்டபம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-6)

# முப்பது இலட்சம் மதிப்புள்ள துணிகள் இலங்கை அகதிகளுக்கு விநியோகம்

விருதுநகர் மாவட்டத்தில் அனுப்பன்குளம், செவலூர், மொட்டமலை, கண்டியாபுரம், ஆனைகுட்டம், குல்லூர் சந்தை, மல்லாங்கிணர் ஆகிய இடங்களில் இலங்கை அகதிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம்களில் ஆயிரத்து 109 குடும்பத்தினர் தங்கியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான வசதிகள் மாவட்ட நிர்வாகம் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம்களில் தற்போது தேவைப்படும் அத்தியாவசியப் பணிகளுக்காக ஒரு கோடியே 56 இலட்சத்து ஆயிரத்து 811 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு ஒவ்வொரு முகாமுக்கும் தேவையான வசதிகளை அதிகாரிகள் செய்து வருகின்றார்கள். இந்தப் பணிகள் இன்னும் சில தினங்களில் முடியும் தருவாயில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள துணிகளை தனி தாசில்தார் (அகதிகள் முகாம்) சதானந்தம் தலைமையில் அதிகாரிகள் விநியோகம் செய்தனர்.




இதேவேளை கடந்த 2 மாதங்களில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அகதி முகாமில் இருந்து 11 பேர் அரசு அனுமதியுடன் இலங்கைக்கு திரும்பியுள்ளதாகவும் தற்போது மேலும் 4 பேர் இலங்கைக்கு திருப்பிச் செல்ல அனுமதி கேட்டுள்ளனர் என்றும் தாசில்தாரர் தெரிவித்துள்ளார். (2-4-6)

# பென்டகன் மீது துப்பாக்கிச் சூடு

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் பாதுகாப்பு அதிகம் உள்ள பகுதி. கடந்த வியாழக்கிழமை இதன் வளாகத்தை நோட்டமிட்ட ஜான் பேட்ரிக்பெடல் (36) என்பவர் பென்டகன் அலுவலகத்துக்குச் செல்லும் மெட்ரோ ஸ்டேஷன் நுழைவாயில்பகுதியில் நின்றிருந்த பாதுகாப்பு வீரர்களை நோக்கி திடீரெனச் சுட்டார்.

இதனால் இரண்டு பாதுகாப்பு வீரர்கள் படுகாயமடைந்தனர். மற்ற வீரர்கள் இவரைச் சுட்டதில் பெடல் படுகாயமடைந்தார். காயமடைந்த மூன்று பேரும் உள்ளூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜான் பேட்ரிக் பெடல் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவருக்குப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு உண்டா என்பது குறித்து அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (2-4-6)

# ஆஸியில் இந்திய குழந்தை கொலை
## பொலிசார் தீவிர விசாரணை

அவுஸ்திரேலியாவில் இந்தியர்களுக்கு சோகம் தொடர்கிறது. சுற்றுலா வந்த குடும்பத்தின் 3 வயது குழந்தை கொலை செய்யப்பட்டது.கொலையாளி பற்றி பொலிசார் தீவிர விசாரணை நடத்துகின்றனர்.

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் தாக்கப்படுவது தொடர்கதை. அதில் 2 பேர் கொல்லப்படடனர். பலர் காயமடைந்தனர். அது பற்றி இரு நாட்டு அரசுகளும் பேச்சு நடத்துகின்றன.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் படிக்கும் ஹர்பிரீத் கவுர் என்ற திருமணமான பெண்ணை காண அவரது கணவரும் 3 வயதுக் குழந்தை குர்ஷனும் இந்தியாவில் இருந்து சுற்றுலா வந்திருந்தனர். இந்த வாரக் கடைசியில் தந்தையும் மகனும் தாயகம் திரும்ப இருந்தனர்.

இந்நிலையில் கடந்த வியாழன் குர்ஷன் திடீரெனக் காணாமற்போனான். அவனைப் பல பகுதிகளில் பெற்றோர் தேடி அலைந்தனர். பொலிசுக்கும் தகவல் தரப்பட்டு அவர்களும் தேடுதல் வேட்டை நடத்தினர். அதில் மெல்போர்னில் இருந்து 30 கி. மீ. தூரத்தில் குர்ஷன் இறந்து கிடந்ததை நேற்று முன்தினம் காலை கண்டுபிடித்தனர்.

இது இந்தியர்களிடையே பீதியை கிளப்பியுள்ளது. வீட்டின் வெளியே விளையாடிக் கொண்டிருந் குழந்தை 30 கி. மீ. தூரம் எப்படி போயிருக்க முடியும். அவனை யாராவது தூக்கிச் சென்று இனவெறியில் கொலை செய்தனரா என்று சந்தேகிக்கின்றர். எனினும் பிரேதப் பரிசோதனை அறிக்கை வந்தும் குழந்தை பலியானதற்கான காரணம் தெரியாமல் பொலிஸ் குழம்புகிறது. (2-4-6)




# பூமியின் மீது விண்கல் மோதியதால் டைனோசர் இனம் அழிவு
## விஞ்ஞானிகள் புதிய விளக்கம்

(லண்டன்)

பூமியின் மீது ஆறரை கோடி ஆண்டுகளுக்கு முன் விண்கல் மோதியதில் ஏற்பட்ட பேரழிவின் காரணமாக டைனோசர் இனம் முற்றிலும் அழிந்துவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சியில் இராட்சத மிருகமான டைனோசரின் எலும்புகளும் முட்டைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த டைனோசர் இனம் அழிந்து ஆறரை கோடி ஆண்டுகள் ஆகின்றன என பல்வேறு நாட்டு அறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பூமியில் ஏராளமான உயிரினங்கள் உலாவி கொண்டிருக்க இந்த இராட்சத இனம் எப்படி அழிந்தது என்பது புரியாத புதிராக இருந்து வருகிறது. வேட்டையாடப்பட்டு கொல்லப்பட்டதாக சிலரும் எரிமலை சீற்றத்தில் சிக்கி இந்த இனம் அழிந்துவிட்டதாக சிலரும் கூறி வருகின்றனர்.

இதுவரை கிடைத்த டைனோசரின் எலும்புகள் உள்ளிட்ட பாகங்களைக் கொண்டு அதன் அழிவு குறித்து உலகம் முழுவதும் உள்ள 41 விஞ்ஞானிகள் கொண்ட குழு கடந்த 20 ஆண்டுகளாக தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டது. பல கோடி ஆண்டுகளாக பூமியில் உலாவி வந்த இந்த மிருக இனம் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் மீது மோதிய விண்கல்லால் முற்றிலும் அழிந்துவிட்டதாக இந்த விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

மெக்சிகோ நாடு அமைந்துள்ள பகுதியில் 15 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்ட விண்கல், அணுகுண்டை விட வேகமாக பூமியின் மீது வந்து மோதியுள்ளது. இந்த அதிர்ச்சியால் பூமியில் பூகம்பமும் சுனாமியும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

விண்கல் மோதிய வேகத்தால் அணுகுண்டைவிட பலமடங்கு சக்தி வாய்ந்த அதிர்வு ஏற்பட்டு பூமியில் ஏற்பட்ட கந்தக புழுதியால் உலகமே இருண்டு போய்விட்டது. பல இடங்களில் காட்டு தீ பரவியது. பூமியின் சுற்றுச் சூழலில் அதிரடி மாற்றம் ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட இந்த மாற்றத்தால் ஓடி ஒளியக்கூட இடம் இல்லாத காரணத்தால் டைனோசர் உள்ளிட்ட ஏராளமான உயிரினங்கள் முற்றிலும் அழிந்து போய்விட்டன என விஞ்ஞானிகள் மேலும் கூறுகின்றனர். (2-4-6)

# தென்கொரியரிடம் செல்போனில் பேசிய வடகொரியருக்கு மரண தண்டனை

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே கடுமையான பகை நிலவி வருகிறது. தென்கொரியாவில் இருப்பவர்களுடன் எந்த வகையில் தொடர்பு கொண்டாலும் அவர்களுக்கு மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ விதிக்கப்படும் என்று வடகொரியா சட்டம் இயற்றியுள்ளது. இந்நிலையில் தென்கொரியாவில் உள்ள தனது நண்பனுடன் வடகொரியாவைச் சேர்ந்த ஜங் என்ற வாலிபர் செல்போனில் பேசினார்.

இத்தகவல் தெரிய வந்ததையடுத்து அவரது வீட்டை வடகொரிய பொலிசார் சோதனையிட்டு அவரது செல்போனை கைப்பற்றினர். அவரை இரகசிய இடத்துக்கு கொண்டு சென்று சித்ரவதை செய்தனர். விசாரணையில் தென்கொரிய நண்பருடன் போனில் பேசியதை ஜங் ஒப்புக்கொண்டார். வடகொரியாவில் விலைவாசி அதிகமாக இருப்பதாகவும் நன்றாக வாழ முடியவில்லை என்றும் புகார் கூறியதாக ஒப்புக்கொண்டார். இதையடுத்து ஜங்கை துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. தென்கொரிய வானொலி இந்த சம்பவத்தை அம்பலப்படுத்தியுள்ளது. (2-4-6)

## வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவரும் பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலை

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலை வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

விடுதி மற்றும் வெளிநோயாளர் பிரிவு என தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறும் மேற்படி வைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை நிலவுவதால் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆளணிவளம், தளபாட வசதிகள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கே பலத்த தட்டுப்பாடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இப்பிரதேச மக்களின் வைத்திய நலன் கருதி குறித்த வைத்தியசாலையின் வளத்தை அதிகரிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (6-49)

## கலைத்தூது அழகியற் கல்லூரியின் மாதாந்த கருத்துப் பரிமாற்றக் களநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற *வேறம்* எனப்படும் கருத்துப் பரிமாற்றகள நிகழ்வின் எட்டாவது அமர்வு நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது அழகியல் கல்லூரியின் கருத்துரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ''யாழ்ப்பாணத்து பண்பாட்டுச் சொத்துக்களை பாதுகாப்பது'' என்னும் பொருளில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் ஆங்கிலமொழியில் உரையாற்றுவார்.

தொடர்ந்து கருத்துப் பரிமாறல் இடம்பெறும்.

ஆங்கில மொழிசார் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் இவ்வமர்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## மனவளர்ச்சி குறைந்த மாணவர்களுக்கான தேசிய மட்ட ஒலிம்பிக் நிகழ்ச்சிகள்

(அல்வாய்)

விசேட ஒலிப்பிக்குழுவும், சர்வதேச ஒலிம்பிக் குழுவும் இணைந்து இலங்கையில் சகல பாடசாலைகளிலும் கல்வி கற்று வரும் மனவளர்ச்சி குறைந்த மாணவர்களுக்கான விசேடஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றை தேசிய மட்டத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி மனவளர்ச்சி குறைந்த மாணவர்களின் உடல் உள மற்றும் சமூகவியற் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தங்கள் பாடசாலையில் கல்வி கற்கும் மனவளர்ச்சி குறைந்த மாணவர்களது விபரங்களை உடன் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலையில் இருந்து மாணவர்கள் போட்டியாளர்களாக பதிவுசெய்ய விண்ணப்பிக்குமிடத்து ஓர் அர்ப்பணிப்புள்ள ஆசிரியரை பயிற்சியாளராக பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் அவர்களுக்கான பயிற்சிகளை விசேட ஒலிம்பிக் குழுவும் சர்வதேச ஒலிம்பிக் குழுவும் இணைந்து தேசிய மட்டத்தில் நடத்தவுள்ளது.

மேலும் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டில் தடகளம், கிரிக்கெட், உதைபந்து என அம்மாணவரை பயிற்சியாரால் வழங்கப்படும் பயிற்சியின் மூலம் செயற்படுத்த முடியும் எனவும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (6-4)

## அனுமதியின்றி இயங்கிய மரக்காலை வணிக நிலையம் சீல் வைப்பு

(சாவகச்சேரி)

எதுவித அனுமதிப்பத்திரமுமின்றி இயங்கிய மரக்காலை மற்றும் பலகைப் பொருட்கள் விற்பனை நிலையம் உட்பட ஐந்து வர்த்தக நிலையங்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் சீல்வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன் அவற்றின் உரிமையாளர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் நடத்திய திடீர் பரிசோதனையின் போது எதுவித அனுமதிப் பத்திரமுமின்றி மரக்காலை மற்றும் மரப் பலகை வகைகள் வைத்திருந்தவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிபதி இந்த வர்த்தக நிலையங்களை சீல் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் அவற்றின் உரிமையாளர்களையும் நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (2-29)


## விபரங்களை அனுப்பிவைக்கவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் கல்விகற்கும் இடம்பெயர்ந்த மாணவர்களிற்கு யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் குறித்த விபரத்தை மாணவர்களது கையொப்பத்துடன் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலக நிதிக்கிளைக்கு அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-29)




# திரை விமர்சனம்



மற்றொரு கவுதம் மேனின் க்ளாஸ் என்று சொல்லலாம். ஒரு அழகான காதல் கதையை கண் முன் நிறுத்தியிருக்கிறார்.

மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங் முடித்துவிட்டு, சினிமா இயக்குநராக வேண்டுமென்ற ஆசையுடன் வலம் வருகிறார் சிம்பு (கார்த்திக்). தனது முந்தைய படங்களில் உள்ள மாஸ் இமேஜிலிருந்து சற்று மாறி நடிப்பின் அடுத்த கட்டத்தைத் தொட்டிருக்கிறார்.

ஒரு ஹை மிடில்க்ளாஷ் மலையாளிப் பெண்ணாக த்ரிஷா (ஜெசி). படம் முழுக்க ஒரு தேவதை போலவே வந்து போகிறார்.

த்ரிஷாவுடன் ஒரு வயதுகுறைவான சிம்பு முதல் சந்திப்பிலேயே த்ரிஷாவின் மீது காதல் கொள்கிறார். முதலில் காதலை மறுத்துவரும் த்ரிஷா சிம்புவுடன் நட்பாகப் பழகிவருகிறார். நாளாக... நாளாக... சிம்பு மீது காதல் கொள்கிறார்.

ஒரு கட்டத்தில் த்ரிஷாவின் வீட்டுக்கு சிம்பு -த்ரிஷா காதல் தெரியவர வழக்கமான மதமும் இனமும் இந்தக் காதலிலும் குறுக்கிடுகிறது. இடையில் கே.எஸ்.ரவிக்குமாருக்கு இணை இயக்குநராக சிம்பு பணிபுரிகிறார். பின்னர் தன் காதலைப் படமாக எடுத்து வருகிறார் சிம்பு.




த்ரிஷா மற்றும் சிம்பு இருவரின் மனம் ஒத்துவராததால் இருவரும் பிரிகிறார்கள்... மீண்டும் சிம்பு- த்ரிஷா இணைகிறார்களா -பிரிகிறார்களா என்பதை ஒரு வித்தியாசமான திரைக்கதையின் மூலம் படத்தை முடித்திருக்கிறார் கௌதம் மேனன். இந்தக்கதைக்கு அட்டகாசமாகப் பொருந்துகிறார் சிம்பு. இந்தப்படத்திற்குப் பின்னர் அவரை மீண்டும் கொமர்ஷியல் நாயகனாக திரும்பாமல் இருந்தால் இன்னும் சில நாட்கள் படங்கள் ரசிகர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது. தனக்கு கொடுத்திருக்கும் கதாபாத்திரத்தை உணர்ந்து படம் முழுக்க ரசித்து ... ரசித்து... நடித்திருக்கிறார் சிம்பு. இந்த மாறுதலான நடிப்பிற்கு சிம்புவிற்கு ஒரு சபாஷ்.

## விண்ணைத்தாண்டி வருவாயா

தேவதை என்ற சொல்லுக்கு த்ரிஷா என்று இன்றைய இளைஞர்கள் அர்த்தம் சொல்லுவார்கள். அவருக்கு காலி ஹேர் மற்றும் புடவை அழகாகப் பொருந்தியிருக்கிறது. நடிப்பின் அனுபவத்தை சரியாகப் பயன்படுத்தி சிம்புவை மிஞ்சுகிறார் த்ரிஷா.

படத்தில் இன்னொரு முக்கியமான விடயம். ஒளிப்பதிவு. மனோஜ் பரமஹம்ஸா தனக்கு கிடைத்திருக்கும் கூட்டணியை உணர்ந்து கவுதம் மேனின் கற்பனைக்கு ஏற்ப படமாக்கியுள்ளார். காதலின் மென்மை உணர்ந்து ஏதோ நம் வாழ்வில் ஏற்படும் காதலைப் போல் படம் ஆக்கியிருக்கிறார். விண்ணைத் தாண்டி வருவாயா. படத்திற்கு பின்னர் நிச்சயம் நல்ல வாய்ப்புகள் அவரை தேடி வரும் சந்தேகமில்லை.



என்னடா முக்கியமான ஆள் பத்தி சொல்வே இல்லையே. என நீங்கள் நினைப்பது புரிகிறது. ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரகுமான். ஒவ்வொரு காட்சிக்கும் புதிய வர்ணத்தையும் வார்த்தைகளால் சொல்ல முடியாத உற்சாகத்தையும் வாரி இறைக்கிறது.

ரஹ்மானின் இசை ரகுமான் அவரின் வாத்தியங்களை வைத்து நம்மை மகுடி கேட்ட பாம்பாய் மயக்குகிறார். குறிப்பாக சிம்பு முதலில் த்ரிஷாவை பார்க்கும் போது கேட்டில் சாய்வார். அப்போதும் அப்புறம் சிம்பு குத்துச்சண்டையிடும் போது பின்னணி இசையில் அசத்தியிருக்கிறார் ரகுமான்.

மன்னிப்பாயா.. பாடலில் திருக்குறளை ரஹ்மான் மிக்ஸ் செய்திருக்கும் அழகுக்கே இன்னொரு ஒஸ்கார் தரலாம். ஓமணப் பெண்ணே ஹோசன்னா பாடல்கள் இந்த ஆண்டின் இளமை கீதங்கள். ஏ.ஆர். ரஹ்மான் - கௌதம் மேனன் கூட்டணி எடுத்த எடுப்பிலேயே இதயங்களைக் கொள்ளை கொள்கிறது.

ஆண்டனியின் எடிட்டிங் படத்தின் கதைகேற்ப அமைந்துள்ளது. படத்தின் இறுதிக்கட்டத்தில் படம் முடிந்து விட்டது என்று ரசிகர்கள் எண்ணி எழுந்து நிற்க மேலும் 10 பத்து நிமிடத்தில் ஒரு புதிய க்ளைமேக்ஸுடன் முடிகிறது படம்.

தன்னுடைய ஸ்டைலான திரைக்கதை மூலம் கதை நகர்த்தியிருக்கும் கவுதம் மேனன் படத்தின் க்ளைமேக்ஸ் மட்டும் ஒரு சிலருக்கு புரியாத வகையில் எடுத்திருப்பது விந்தை.

*மொத்தத்தில் விண்ணைத் தாண்டி வருவாயா "விண்ணைத் தொடும்"*

# ரஞ்சிதா தலைமறைவினால் மணிரத்னம் குழப்பம்




நித்தியானந்தா லீலை விவகாரத்தில் அடிபட்டு திடீரென்று நடிகை ரஞ்சிதா காணாமல் போனதில் ஏக குழப்பத்தில் இருக்கிறார் மணிரத்தினம். காரணம் விரைவில் வெளியாக உள்ள அவரது இராவணன் படத்தில் ரஞ்சிதா முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

இன்னும் சில காட்சிகள் பாக்கியிருக்கும் நிலையில் ரஞ்சிதா தலைமறைவாகிவிட்டதால் ஏற்கனவே பல சோதனைகளைச் சந்தித்த மணிரத்னம் டென்ஷனின் உச்சத்துக்கே போய்விட்டாராம்.

ரஞ்சிதா 1992 இல் பாரதிராஜா இயக்கிய நாடோடி தென்றல் படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். விஜயகாந்துடன் பெரிய மருது. அர்ஜுனுடன் கர்ணா, ஜெய்ஹிந் உள்ளிட்ட பல படங்களில் நடித்து பிரபலமானார். ரஞ்சிதாவின் தந்தை ஒரு இராணுவ அதிகாரி. எனவே தந்தையைப் போலவே இராணுவத்தில் பணியாற்றும் ராகேஷ் மேனன் என்பவரை திருமணம் செய்து சினிமாவுக்கு முழுக்கு போட்டார். கணவருடன் சந்தோஷமாக குடும்பம் நடத்திய அவர் சமீபத்தில் அவரைப் பிரிந்து தனியாக சென்னையில் வசித்தார். இங்கு அவருக்கு 3 வீடுகள் உள்ளனவாம். இரண்டு வீடுகளை வாடகைக்கு விட்டு விட்டு ஹபிபுல்லா சாலை வீட்டில் வசித்தார் ரஞ்சிதா. திருமணத்துக்குப் பின் மீண்டும் சில படங்களில் நடித்தார். சினிமாவில் அவரை அறிமுகப்படுத்திய பாரதிராஜாவின் தெற்கத்தி பொண்ணு டி.வி. தொடரிலும் நடித்தார். மணிரத்னம் இயக்கும் இராவணன் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

கணவருடன் மோதல் என்றும் பணக்கஷ்டத்தில் இருக்கிறார் என்றும் அதனால் தான் நடிக்க வந்துள்ளார் என்றும் அவரைப்பற்றி செய்திகள் வெளியான போது அவற்றை ஒரேயடியாக மறுத்த ரஞ்சிதா "எனது கணவருடன் சண்டையும் இல்லை. எனக்கு பணக் கஷ்டமும் இல்லை கணவருர் சம்மதத்தோடுதான் நடிக்க வந்தேன். வில்லி வேடங்களில் கூட நடிக்கத் தயாராக இருக்கிறேன்" என்றார். இந்நிலையில்தான் சுவாமி நித்தியானந்தாவுடன் இணைந்து பரபரப்பான படங்கள் வெளிவந்துள்ளன. இந்தக் காட்சிகளால் தமிழ்த் திரையுலகினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக ஏப்ரல் விடுமுறைக்காலத்தில் இராவணாவை வெளியிடும் நோக்கத்தில் பரபரப்பாக இயங்கிவரும் மணிரத்னம் இராவணா பட விடயமாக ரஞ்சிதாவை தொடர்புகொள்ள முடியாததால் டென்ஷனில் இருக்கிறார். ரஞ்சிதா விவகாரம் படத்தை பாதித்துவிடுமோ என்றும் கவலையில் உள்ளார். காரணம் இது மணிரத்னத்தின் சொந்தப்படம். ரஞ்சிதா விவகாரத்தோடு சேர்த்து 14 பெரிய பிரச்சினைகளை இராவணா படம் எதிர்கொண்டுள்ளது.





## காமெடி ரகசியம்



கதைக்கும் காட்சிக்கும் உடனடியாகவும் சொல்லும் வசனத்திற்கு ஏற்ப காமெடி செய்தால் மட்டுமே ரசிக்கும்படியாக இருக்கும் என்கிறார் சந்தானம். டைரக்டரை மீறி எதுவும் செய்வதில்லை. அவரது அனுமதியுடன் காமெடி காட்சியை சிறப்பாக உருவாக்கி வருகிறேன் ... எனது ஒவ்வொரு படத்திலும் ... வருகிறேன் என்ற சந்தானம், 10 படங்கள் ... வருகிறார்.

# தமன்னாவுக்கு 15 ஹீரோ





ஜெயம் ரவி, ஜெயம் ராஜா சகோதரர்கள் மீண்டும் இணையும் படம் 'தில்லாலங்கடி' எடிட்டர் ஏ.மோகன் வழங்க ஜெயம் கம்பெனி தயாரிக்கும் இதில் ஜோடியாக தமன்னா நடிக்கிறார்.

"ஜெயம்" ரவியை வைத்து ... இயக்கிய ஜெயம் முதல் ... வரை எல்லாப் படங்களும் வெற்றியடைந்துள்ளது. ... காதல், காமெடி, அக்ஷன், சென்டிமென்ட் என்ற ஜனரஞ்சகமாக ... உருவாகிறது.

எங்கள் கூட்டில் வெளியான முந்தைய படங்களைப் போல் இதில் பாடலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். ... 365 ... பாடலை படமாக்கியது சிறப்பம்சம். ...

இந்தப் பாடல் ஆரம்பமாகும். ... தமன்னா ... தமன்னாவை தோன்றும். ...

இந்தப் பாடல் காட்சியை மட்டும் படம் பிடிக்க "கிரேன் மோஷன் கொன்ட்ரோல்" கமராவை பயன் படுத்தினோம். ...

... கொடுத்தார். இதுதவிர படத்தில் இடம்பெறும் "என்னவாக்காதலிக்காதே.." ... பாடலுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து ... வடிவமைத்துள்ளோம்.

ஷாம், வடிவேலு, சந்தானம் என்று ... நடிகர்கள் ... ஒளிப்பதிவாளர் பி.ராஜா சேகரும் ... சிறந்த ஒத்துழைப்பு கிடைத்தது. ... பூர்த்தி செய்யும் விதமாக "தில்லாலங்கடி இருக்கும்" என்கிறார் இயக்குநர் ராஜா.

# தம்பிக்கு இந்த ஊரு



வீ.கே.பிலிம் சார்பில் ஜெ.சரவணன் மற்றும் சி.பாஸ்கர் இணைந்து தயாரித்துள்ள படம் "தம்பிக்கு இந்த ஊரு" பரத் நாயகனாக நடித்திருக்கும் இந்தப்படத்தை பத்ரி இயக்கியுள்ளார்.

பரத் சிங்கப்பூரில் வசிப்பவர். தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர் வருகிறார். நாயகி சனாகான். அவர் மீது பரத்திற்கு காதல் ஏற்படுகிறது. ...

சிங்கப்பூர் விமான நிலையத்தில் விசேட அனுமதி வாங்கி சில காட்சிகளையும் ஒரு பாடல்காட்சியையும் எடுத்திருக்கிறார். ...

## அவன் பெயர் தமிழரசி

## தமிழ் சினிமாவின் புதிய முயற்சி



அவன் பெயர் தமிழரசி படம் இன்று வெளிவந்து சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. ...

# 2020இல் ஏற்றுமதி இலக்கு 20 பில்.டொலர் என்கிறார் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர்



2020ஆம் ஆண்டளவில் சகல துறைகளின் ஏற்றுமதியில்20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை ஏற்றுமதியாளர் சங்கமும் உறுதுணை வழங்கும் என இலங்கை ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சரத் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எமது அமைப்பின் பங்களிப்பானது இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றமதியில் கணிசமானது. எமது சங்கத்தில் 450க்கும் மேற்பட்ட ஏற்றுமதி நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன. இலங்கையின்மொத்த ஏற்றுமதி வருமானத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்களிப்பு எமது அமைப்பினதே எனவும் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2020ஆம் ஆண்டளவில் 20 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிக்கு ஏற்றுமதியை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது தற்போது 7 பில்லியன் என்ற அளவில் உள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 2009இல் 2008 உடன் ஒப்பிடுமிடத்து 17 வீதம் அதிகரித்துள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ்ரத்தானது, எமது சக போட்டியாளர்களுடனான போட்டியை மேலும் அதிகரிக்கும்.

எமது அயல் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மின் சக்தி செலவு மற்றும் நிதிச் செலவுகள் அதிகமாகவுள்ளன. எவ்வாறெனினும் மத்திய வங்கியின் திறைசேரி வட்டி வீதங் களை குறைத்தமையானது ஏற்று மதியாளர்களுக்கு நம்மையளிக்கக்கூடியது எனத் தெரிவித்துள்ளார்.




# தொலைத்தொடர்புத்துறையில் புதுவரவு; ரீகோவை கையகப்படுத்தியது எடிசலாட்

(கொழும்பு)

ஐக்கியஅரபு இராச்சியத்தின் (டுபாய்) முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனம் எடிசலாட் இலங்கையில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

எடிசலாட் ஆனது, ரீகோவை கையகப்படுத்திக்கொண்டு இலங்கை சந்தையில் நுழைந்துள்ளது. (ரீகோ முன்னர் செல்ரெல் ஆக இருந்தது.)

தொலைத்தொடர்புத்துறை அபிவிருத்தியில் முக்கிய அங்கம். இலங்கை வாடிக்கையாளர்களின் தேவையை எடிசலாட் அளிக்கும் என எடிசலாட் இலங்கைப் பிரிவின் பணிப்பாளர் துமிந்திர ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயிரம் மேலதிக தள நிலையங்கள் அமைக்கப்படும். 450இற்கும் மேற்பட்ட தள நிலையங்கள் 2G தொழில்நுட்பத்திற்காகவும் அதே போல் 500 தள நிலையங்கள் 3G தொழிநுட்பத்திற்காகவும் நாடு முழுவதும் ஒரு வருடத்தினுள் அமைக்கப்படும்.




500 3G தளநிலையக்களில் 100 தளநிலையங்கள் யாழ். குடாநாட்டில் அமைக்கப்படும் எனவும் யாழ்ப்பாணத்தில் தற்போது 8 கோபுரங்கள் செயற்பாட்டில் உள்ளன என்றும்,

கேபிள் ரிவி வசதியும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் எடிசலாட்டின் இலங்கைப் பிரிவின் ஆரம்ப வைபவத்தில் பேசிய போது அவர் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.47 | 115.06 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 170.28 | 173.79 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.50 | 157.16 |
| சுவிஸ் பிராங் | 104,55 | 107.82 |
| கனேடிய டொலர் | 109.11 | 112.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.40 | 104.44 |
| சிங்கப்பூர் டொலர் | 80.59 | 82.50 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.50 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.09 | |

# யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தொழிற்றுறையினருக்கான வாய்ப்புகள்

## ஊடகவியலாளர் சந்திப்பில் விபரிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தக்கு உங்கள் நுழைவாயில் என்னும் கருப்பொருளில் எதிர்வரும் ஏப்ரல் 18 முதல் 20 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சி பற்றிய ஆரம்ப நிகழ்வும் ஊடகவியலாளர்களுக்கான விளக்கமளிப்பும் கடந்த வாரம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தினரால் நடத்தப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத் தலைவர் கே.பூரணச்சந்திரன், இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் தனியார் நிறுவனப் பணிப்பாளர் இம்ரான் ஹசான், இலங்கை வர்த்தக சங்கப் பிரதிநிதி சூசைதாசன் ,யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,யாழ்.அரச அதிபர் க. கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இதில் கருத்துத் தெரிவித்த கே. பூரணச்சந்திரன்,முப்பது நாற்பது வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தொழிற்றுறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதற்கு இக் கண்காட்சி பெரியளவில் உதவும்.வட பகுதி தொழிற்றுறைக்கு உலக வங்கி உதவுவதாக உறுதியளித்துள்ளது.இது யாழ். தொழிற்றுறைக்கு பொன்னான சந்தர்ப்பம் என்றார்.

இதேபோல்,குறித்த வர்த்தக சந்தை ,கண்காட்சி குறித்து இம்ரான் ஹசான் மற்றும் சூசைதாசன் போன்றோரும் விளக்கமளித்தனர்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ,கைத்தொழில் என்பது ஒரு நாட்டின் ஒரு தேசியத்தின் முக்கியமான அபிவிருத்திப் பணியாகும். காலனித்துவ நாடுகளாக இலங்கை, இந்தியா என்பன இருந்தபோது இத்துறையில் புறக்கணிக்கப்பட்டன. இந்திய அமைதிப்படை இங்கு வந்த காலத்தில் இங்கிருந்தே இந்தியாவுக்கு பொருட்களை எடுத்துச் சென்றார்கள்.ஆனால் இன்று இந்தியாவின் வளர்ச்சி அபரிமிதமாகவுள்ளது. இதேவேளை நாம் முன்னர் பல கைத்தொழில்களில் முன்னிலையில் இருந்தோம். ஆனால் போர் காரணமாக அவை தென் பகுதிக்கு நகர்ந்துள்ளன.தற்போது எமது வளங்களிலேயே தங்கி நிற்கும் காலம் பிறந்துள்ளது. எனவே இம் முயற்சிகளுக்கு சகல வழிகளிலும் உதவப்படும் என்றார்.

இதேவேளை இதில் கலந்து கொண்டு பேசிய யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ,85 களில் 5 ஆயிரத்து 500 சிறிய தொழிற்சாலைகளில் 35 ஆயிரம் பேர் தொழில் செய்தனர்.ஆனால் தற்போது 633 சிறிய தொழிற்சாலைகள் மாத்திரமே இயங்குகின்றன. அண்மையில் இங்கு வந்த இலங்கை வங்கியின் தலை,வர் இதற்கு உதவு வதாகத் தெரிவித்துள்ளார்.நாம் 25 வருடங்கள் பின் தங்கியுள்ள நிலைமையை நிமிர்த்த வேண்டும். இதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் நிறுவனங்களுக்கு சகல ஒத்துழைப்பும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இலங்கையின் முன்னணி நிறுவனங்கள் மற்றும் இந்திய நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ள 3 நாள் நடைபெறும் கண்காட்சியில் தொழிற்றுறையினர்முதல்நாள்அமர்வைப் பார்த்து ,விளக்கம் பெற்று தமக்குத் தேவையான இயந்திர சாதனங்களை பதிவு செய்து அடுத்து வரும்நாட்களில்கொள்வனவு செய்ய முடியும் எனவும் இதற்கான நிதி ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளனர்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3824.17 | 18.32 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4387.63 | 25.40 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1091.62 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : ஜோன் கீல்ஸ் ஹோட்டல்,ஏசியன் ஹோட்டல்ஸ்,தாஜ் லங்கா ,என்வெயர்மென்டல் றிசோசஸ் ,சிங்கர் சிறிலங்கா.
***சரிவைக் காட்டிய பங்குகள்***. சிறிலங்கா ரெலிகொம் ,டி.எப்.சி.சி.வங்கி , ஹற்றன் நஷனல் வங்கி ,களனி ரயர் ,லங்கா சீமெந்து.

# வர்த்தக செய்தித் துளிகள்

## 2 மாதத்தில் 90 மில்லியன் விற்றுத் தீர்ந்தது




மைக்ரோசொப்ட்,வின்டோஸ் 7 ஐ அறிமுகப்படுத்தி 2 மாதங்களில் 90 மில்லியன் பிரதிகள் விற்றுத் தீர்ந்துள்ளதாக மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது.இதுவே வரலாற்றில் இவ்வாறு விரைவாக விற்பனையாகின்ற ஒப்ரேட்டிங் சிஸ்டம் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை மைக்ரோசொப்டின் காலாண்டு வருமானம் 19 பில்லியன் அமெரிக்க டொலர்கள். வின்டோஸ் 7 இன் வரவு நிறுவன வருமானத்தை மேலும் அதிகரிக்கும் எனவும் மைக்ரோசொப்ட் நிறுவன நிதிப் பிரிவு தலைமை நிறை - வேற்று அதிகாரி பீற்றர் கெலின் தெரிவித்துள்ளார்.

## அடுத்த 10 ஆண்டுகளில் 400 விமான நிலையங்கள் தேவை

இந்திய விமான சேவைத்துறை வளர்ச்சிப் பாதைக்கு திரும்பி வருகிறது.குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக இத்துறை ஆண்டுக்கு 18 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டுவருகின்றது.இதேநிலை நீடித்தால் அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவுக்கு 400 விமான நிலையங்கள்தேவைப்படும் என அண்மையில் ஹைதராபாத்தில் இடம் பெற்ற சர்வதேச விமானக் கண்காட்சியில் கலந்து கொண்ட இந்திய மத்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் பிரபுல் பட்டேல் தெரிவித்தார்.



## உலக அளவில் மூன்றாமிடத்தில் இந்திய மருந்து உற்பத்தித்துறை

இந்திய மருந்துத்துறை ,உற்பத்தி அடிப்படையில்,சர்வதேச அளவில் மூன்றாமிடத்திலுள்ளது. இந்தியாவில் தற்போது உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் இந்திய மதிப்பு ரூ.ஒரு இலட்சம் கோடிக்கும் அதிகமான அளவில் உள்ளது. இதனடிப்படையில் மருந்து உற்பத்தித்



துறை உலகில் 14 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த 1980ஆம் ஆண்டில் இந்திய மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் ஒட்டுமொத்தத்தில் ஈட்டிய வருவாய் 1500 கோடி இந்திய ரூபாய்களாக இருந்தது. இது, தற்போது ஒரு இலட்சத்து 611கோடி ரூபாயாக அபார வளர்ச்சி கண்டுள்ளது எனவும் கடந்த 2008/09 நிதியாண்டில் இந்திய மருந்து ஏற்றுமதி 25 சதவீதம் உயர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து அமெரிக்கா ,ஐரோப்பா, சீனா, ரஷ்யா மற்றும் இலங்கை போன்றவற்றுக்கு ஏற்றுமதியாகின்றன.

## திறமையான பணியாளர்களை தக்கவைக்க பங்குகளை ஒதுக்கும் இந்திய நிறுவனங்கள்

இந்திய நிறுவனங்கள் திறமை வாய்ந்த பணியாளர்களை தக்க வைத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு அதிகளவு பங்குகளை ஒதுக்கி வருகின்றன.

கடந்த சில மாதங்களாக 15 நிறுவனங்கள் முக்கிய பொறுப்புக்களில் உள்ள பணியாளருக்கு கணிசமான அளவு பங்குகளை ஒதுக்குவதாக அறிவித்துள்ளன.பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனங்களான எச்.டி.எப்.சி .வங்கி, ஆக்சிஸ் வங்கி,கெய்ரன் இந்தியா,விரோ, ரிலைன்ஸ்கம்யூனிகேஷன்ஸ் மற்றும் கஸ்லால் எனர்ஜி ஆகியவை அடங்கும்.

எதிர்கால வளர்ச்சியில் அபார நம்பிக்கை கொண்டுள்ள நிறுவனங்கள் அவற்றின் பணியாளர்களுக்கு பங்குகளை ஒதுக்கி வருகின்றன என சந்தை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

கு.முருகதாஸ்





சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தினரால் சிறுவர்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட *மலர்களை மலர விடுங்கள்* என்னும் வீதி நாடகம் யாழ். குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் இடம் பெற்ற நாடக ஆற்றுகையினைப் படங்களில் காணலாம்.

## முகாமிலுள்ள கிளி. மாவட்ட மக்களின் மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்துள்ளது

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

கடந்த கால யுத்த அனர்த்தங்கள் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து நிவாரணக் கிராமங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்டு விட்டதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி தெரிவித்துள்ளதாக அரசாங்க இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தகவல் தெரிவிக்கையில்; தற்சமயம் நிவாரணக் கிராமங்களில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் எவருமே இல்லை என்றும் கடந்த புதனுடன் கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குள் உள்ளடங்கியுள்ள கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிலேயே இடம்பெயர்ந்த அனைரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அம்மக்களுக்கு உடனடி நிதி, நிவாரணம், வங்கி வைப்பு உட்பட குறிப்பிட்ட காலத்திற்கு உலர் உணவு நிவாரணம் என்பனவும் கிரமமாக வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-6)

## ஏப்ரல் மாத ஓய்வூதியம் முன்கூட்டியே கிடைக்கும்

ஏப்ரல் மாத ஓய்வூதியக் கொடுப்பனவை முன்கூட்டியே வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் வழங்கப்படவிருந்த ஏப்ரல் 8ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஏப்ரல் 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமையே ஓய்வூதியத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கூறினார். இதற்கான ஆவணங்களை உடன் பூர்த்தி செய்து கணனியில் தரவுகளைப் பதிவு செய்யுமாறு அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (2-4-6)

## வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான முறையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது

### தபால் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் நடவடிக்கைகளுக்காக முறையான திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 22ஆம் திகதி பொறுப்பேற்ற பின்னர் அவை பாதுகாப்பான முறையில் விநியோகிக்கப் படும் என தபால் மா அதிபர் எம். கே. பி. திசாநாயக்க குறிப்பிட்டார்.

இதற்கமைய தபால் மூல வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகள் எதிர்வரும் 17ஆம் திகதி தபாலில் சேர்க்கப்படவுள்ளன.

இவை கிடைக்கப்பெற்றதும் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் கூறியுள்ளார்.

அத்துடன் கொழும்பு மாவட்டத்துக்கான வாக்காளர் அட்டைகளை தேர்தல்கள் செயலகத்திலேயே பொறுப்பேற்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன் பொருட்டு தபால் அலுவலகமொன்றை ஏற்கனவே தேர்தல் செயலகத்தில் நிறுவ தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டதும் அவற்றை வீடு வீடாகச் சென்று விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அத்துடன் வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கான வாக்காளர் அட்டை விநியோக நடவடிக்கைகளுக்காக விசேட திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் கூறினார்.

யாழ். மற்றும் வன்னித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடி இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-3-4-6)

## யுத்தம் காரணமாகவே வாழ்க்கைச் செலவு உயர்வு

### பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக வெளிநாடுகளுக்கு அதிகளவு பணம் செலுத்த நேரிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதுடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இறுதிக் கட்ட யுத்தத்திற்காக வெளிநாடுகளிடமிருந்து கொள்வனவு செய்த ஆயுதங்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் நிலுவையில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாபெரும் யுத்தத்தின் பின்னர் உடனடியாக அரசாங்கத்திற்கு பணம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது என தெரிவித்த அவர் இந்த நிலைமையினை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் உடனடியாக பொருட்கள் சேவைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட வேண்டுமென சிலர் எதிர்பார்க்கின்றனர். எனினும் ஆயுதக் கொள்வனவிற்காக செலுத்தப்பட வேண்டிய கடன்கள் இன்னமும் முழுமையாகச் செலுத்தப் படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தை விலைகளைவிடவும் அதிகளவு பொருட்களின் விலையை குறைக்க முடியாது எனவும் இவ்வாறான ஓர் நிலைமையிலும் அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களையும் அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-4-6)

## இலங்கை கடற்படையில் புதிதாக கரையோர காவல்படை

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் புதிதாக கரையோர காவல்படை உருவாக்கப்பட்டுள்ளது. காலியில் நடைபெற்ற அதன் ஆரம்ப விழாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; போர் நிறைவு பெற்றுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ள போதும் அது தனது படைகளைத் தொடர்ந்து பலப் படுத்தி வருகின்றது. அதற்கு இந்தியாவும் ரஷ்யாவும் சீனாவும் தொடர்ந்து தமது ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் நவீன கடற்படை கலங்களை கொண்டு இலங்கை கடற்படை கரையோர காவல்படையை உருவாக்கியுள்ளது. காலியில் நடைபெற்ற அதன் ஆரம்ப விழாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவுஸ்திரேலியா தூதுவர் உட்பட பெருமளவான பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே நெதர்லாந்து அரசின் உதவியுடன் காலியில் அமைக்கப்பட்டுள்ள கடல்வள தொல்பொருள் காட்சியத்தையும் அவர் திறந்து வைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (2-4-6)

## ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்ச் சிறுவர்கள் உளவியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்

### நோர்வே சிறுவர் பாதுகாப்பு அமைப்பு

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெற்ற போரினாலும் இலங்கை அரசின் தடுப்பு முகாம்களில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டதனாலும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உளவியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக நோர்வேயைத் தளமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு (Redd Barna) அமைப்பு என்ற உதவி அமைப்பின் பணிப்பாளர் விடர்ஸ்ரோம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம்களுக்குச் செல்லும் அனுமதிகள் கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதிக்கு பின்னரே எமது நிறுவனத்திற்குக் கிடைத்தன. முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு அங்கு ஒரு நட்புறவுள்ள சூழலை ஏற்படுத்த நாம் முயன்றிருந்தோம்.

மிகவும் அசாதாரண சூழ்நிலைகளை சாதாரண சூழ்நிலைகளாக மாற்றுவதே எமது நோக்கம். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வசதி மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதை எமது அமைப்பு மேற்கொண்டு வந்தது.

இலங்கையில் நாம் முன்னெடுத்துள்ள ஐந்தாவது திட்டம் இது. சிறுவர்களுக்கு அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்ட பெரியவர்களின் உதவிகள் தேவை. நாம் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சிகளையும் வழங்கியிருந்தோம்.

வடபகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட இந்த சிறுவர்கள் முற்றுமுழுதாக உதவிகளில் தங்கியுள்ளனர். எனவே எமது பணி அவர்களைப் பாதுகாப்பதாகும். ஒரு மனிதாபிமான அமைப்பில் பணிபுரிவதையிட்டும் முகாமுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-4-6)

பணத்தை வைத்துப் பாசத்தை பிரிக்காதே.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## 'பணம்' புகுந்து விளையாடுகிறது தமிழ் இனத்தின் இருப்பு பறிபோகிறது

இலங்கை மண்ணில் இப்போது நீதி, சட்டம், ஒழுங்கு என அனைத்துமே உறங்கு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இப்பரிதாப நிலையினை ஏற்படுத்திய பெருமை பணத்திற்கு மட்டுமே உண்டு.

கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற போரின் போது மனித உயிர்களை காவு கொள்வதற்கு மறைமுகமாகப் பயன்படுத்தப்பட்ட பணம் தற்போது வெளிப்படையாக எழுந்து நின்று ருத்திர தாண்டவம் ஆடுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கும், இனப்போர் உச்சமடைவதற்கும், அந்த உச்சத்தை பாதாளத்தில் விழுத்துவதற்கும் பணமே மூல காரணமாக இருந்துள்ளது.

பணத்தினால் எதையும் செய்ய முடியும் என்ற மிக மோசமான நிலை இலங்கையைத் தவிர வேறு எங்கும் பொருந்தமாட்டாது.

இப்போது கூட பணம் எழுந்து நின்று ஆட்டம் போடுகின்றது. அந்த ஆட்டத்தில் இணைந்துகொள்வதற்குப் பலர் தயாராகிவிட்டனர்.

இனம், மொழி, மதம், குடும்பம் என்ற அத்தனை உறவுகளையும் தூக்கி எறிந்து விட்டு பணம் இருந்தால் போதும் மிகுதி அனைத்துமே நல்லதாக நடந்தேறும் என்ற கொள்கை மக்கள் மத்தியில் வலுவடைவது அவ்வளவு நல்லதல்ல.

எதற்கும் 'பணம்' என்ற நினைப்பு வலுவடையும் போது எங்கள் பண்பாடுகள் பாடையேறும். அன்னியோன்யமான குடும்ப உறவுகள் குலைவடையும்.

எதிலும், எங்கும் வியாபாரச் சிந்தனையும், ஏமாற்று வார்த்தைகளுமே மிச்சமாகும்.

உலகநாடுகளில் மலிந்து போயுள்ள விவாகரத்துகள், ஒழுக்கக் கேடுகள் தாண்டவம் ஆடும்.

இத்தகைய மோசமான நிலையைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடும் தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் பொதுத் தேர்தலில் பணம் புகுந்து விளையாடும் அழகு கண்டு அதிசயிக்கார் யார் உளர்!

பணம் எங்கள் வாழ்வுக்கு அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக எங்கள் வாழ்வை பணம் முழுமையாக விழுங்கி விடுமாக இருந்தால் எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படி அமையும்? ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.

# தமிழகத்தில் ஏற்படும் உணர்வலைகளை மழுங்கடிக்கவே நிருபமா இங்கு வந்துள்ளார்

## இடதுசாரி முன்னணியின் தலைவர்

(கொழும்பு)

தமிழகத்தில் ஏற்பட்டு வரும் கருத்து மாற்றங்களை மழுங்கடிப்பதற்கே இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் வந்துள்ளதாக இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் நாட்டில் ஏற்படும் உணர்வுபூர்வமான செயற்பாடுகளை தடுப்பதற்காகவே இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு இந்திய மத்திய அரசு முழுமையாக ஆதரவுகளை வழங்கியிருந்தது. ஆனால் அது தற்போது 13 ஆவது திருத்தச் சட்டங்களுக்கு அப்பால் ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை காண்பதற்கு முயன்று வருகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழகத் தலைவர்களிடம் ஏற்பட்டு வரும் மாற்றங்களை மழுங்கடிப்பதற்கே தற்போது இந்தியா முயன்று வருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவில் உள்ள இடதுசாரி கட்சிகளும் இலங்கைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளன. அவற்றை எல்லாம் மழுங்கடிப்பதற்கே இந்தியா தற்போது முயன்று வருகின்றது. அதற்காகவே நிருபமா வந்துள்ளார்.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் தற்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. ஆனால் விடுதலைப்புலிகளை முறியடிப்பதற்கு அவர்கள் தான் அரசுக்கு பணமும் ஆயுதங்களும் வழங்கியவர்கள். தற்போது அவர்களை அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றனர்.

சிங்கள இன கடும்போக்காளர்களை கொண்ட அரசிடம் இருந்து நாம் எவ்வாறு அதிகாரப்பகிர்வை எதிர்பார்க்க முடியும். அவர்கள் தற்போது உள்ளூராட்சி சபைகளுக்கு எதனைவழங்கியுள்ளார்களோ அதனை தவிர நாம் எதனையும் அவர்களிடம் இருந்து பெறமுடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## ராஜபக்ஷ குடும்பத்தினர் அரசியலை பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவில்லை-பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தினர் அரசியலைப் பயன்படுத்தி முறையற்ற விதத்தில் பணம் சம்பாதிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட பிரதான வேட்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு பாரியளவு சொத்துக்கள் காணப்படுவதாக சிலர் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் முறையற்ற வகையில் தமது குடும்ப உறுப்பினர்கள் ஓர் தேனீர் கடையைக் கூட வைத்திருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். தமது சொத்துக்களையும் மக்கள் சேவைக்காக விற்பனை செய்த தமது தந்தையின் தூய அரசியல் பாதையை தாம் பின் பற்றிவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வத்தளைப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (2-6)

## வெளிநாட்டில் பணிபுரிவோரினால் அந்நியச்செலாவணி அதிகரிப்பு

வெளிநாட்டில் பணி புரியும் இலங்கையர்களால் அனுப்பப்படுகின்ற அந்நியச் செலாவணி கடந்த வருடத்தில் குறிப்பிடத்தக்க அளவால் அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவிக்கிறது.

கடந்த வருடத்தில் அந்நிய செலாவணி வருமானம் சுமார் 33ஆயிரம் கோடி ரூபாவாக பதிவாகியது என பணியகத்தின் தலைவர் ஹிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டார்.

2008ஆம் ஆண்டளவில் ஒப்பிடுகையில், 14 வீத அதிகரிப்பாக அமைந்துள்ளது எனவும் வெளிநாட்டு தொழிலுக்காக செல்கின்ற இலங்கையர்களுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பில் உரிய தெளிவைப் பெற்றுக்கொடுத்தமை இதற்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வெளிநாடு செல்கின்ற இலங்கையர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இணக்கப்பாடு காணப்பட்டமையும் அந்நியச் செலாவணி அதிகரிப்புக்கு மற்றும் ஒரு காரணமாகும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (6-4)

## சுற்றுலா விசா காலாவதியானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்

சுற்றுலா விசா காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியிருந்த் வெளிநாட்டவர்கள் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டவர்களே கூடுதலாக அடங்குகின்றனர் என திணைக்களத்தின் விசாரணைப்பிரிவின் உதவிக்கட்டுப்பாட்டாளர் டபிள்யூ தெய்வேந்திரராசா குறிப்பிட்டார்.

அவர்கள் இந்தநாட்டில் தங்கியிருந்த காலப்பகுதியில் பல்வேறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த வெளிநாட்டவர்கள் மீண்டும் இல்ங்கைக்குள் பிரவேசிக்க முடியாதவகையில் கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# குற்றம் - காணலா? களைதலா?

### பரமபிதா காட்டிய பாதை

உலகில் இரண்டு வகை மனிதர்களைப் பார்க்கின்றோம். ஒன்று பிறரின் குற்றங்களையே காணுகின்றவர்கள். மற்றையது பிறரின் குற்றங்களைத் தண்டிக்கின்றவர்கள். ஆனால் மூன்றாவது வகை மனிதர்களும் உண்டு; அவர்கள் சிலரே அவர்கள் குற்றம் செய்யாமல் தம்மைக் காத்துக் கொள்பவர். இவர்களைத்தான் *பழி நாணுகின்ற பெருமக்கள்* என்று வள்ளுவர் கூறுகின்றார்.

ஆம், இது குறை காணும் உலகம்; குற்றம் மலிந்த சமூகம். குற்றங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தனிமனிதர் குற்றம் மற்றையது சமூகக் குற்றம்.


முதலில் தனிமனிதர் குற்றம் என்னும் போது தனி மனிதன் இன்னொரு தனி மனிதனுக்கு செய்கின்ற குற்றங்கள்.

உதாரணமாக ஒருவனைப்பற்றி தவறாக நினைப்பது, அவரைப் பழிவாங்கத் துடிப்பது, அவரைப்பற்றி பொறாமைப் படுவது, அவர் நன்றாக இருக்கக் கூடாது என்று நினைப்பது.

அடுத்து பிறரின் சொல்லில் குற்றம் காணுவது என்பது அடுத்தவர் என்ன பேசுகிறார், எப்படிப் பேசுகிறார், எங்கே பேசுகிறார் என்று சதா நினைத்துக் காத்திருப்பது .

அடுத்து பிறரின் செயலில் குற்றம் காண்பது என்பது அடுத்தவர் என்ன செய்கிறார், எப்படி செய்கிறார் என்பதை கூர்ந்து கவனிப்பது; பின் அதில் குற்றம் காண நினைப்பது,

மேற்கூறியவை அனைத்தும் தனிமனிதனுக்கு இழைக்கபடும் குற்றங்கள். இவர்களைப்பற்றி ஆண்டவர் இயேசு சாட்டையடியாகக் கூறுகிறார். பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக் காதீர்கள். அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள் நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டை யைப் பார்க்காமல், உங்கள் சகோ தரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவ னிப்பதேன்? என்று கூறுகிறார்.



ஆம், இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு ஆழமாக எடுத்துரைக்கிறது. குற்றத்தைக் காண்பதைவிட தம் குற்றத்தைக் களைவதே சாலச் சிறந் தது. இதற்கு மனமாற்றம் வேண்டும். மேலோட்டமான மன மாற்றம் அல்ல; ஆழமான மனமாற்றம் வேண்டும். இந்த மன மாற்றம் என்பது பிறரின் குற்றங்களைக் காண்பதல்ல; மாறாக பிறர் குற்றம் செய்யாமல் தடுப்பது. இது நற்செய்தி யின் முதல் பகுதி.

நற்செய்தியின் இரண்டாவது பகுதி ஒருவர் குற்றம் புரியாமல் அக்குற்றங்களை களைந்து திருந்தி வாழவேண்டும். அப்படி திருந்துவதற்கு இறைவன் வாய்ப்புக்களையும் நேரங்களையும் காலங்களையும் கொடுத்துக் கொண்டே இருக்கின்றார். அதைப் பயன்படுத்தி நாம்குற்றமற்றவர்களாய் மனம் திருந்தி வாழ வேண்டும். அதைத்தான் இந்தத் தவக்காலமும் நமக்கு வலியுறுத்துகிறது.

எனவே, குற்றம் புரிவது மனித இயல்பு; குற்றம் களைவது புனித பண்பு. எனவே பிறர் குற்றம் காண்பதை விட தம் குற்றம் களைந்து மனம் மாறி நல்லவர்களாக வாழ்வோம்.

ஜோன் றொபேர்ட்

# 28ஆவது ஆண்டு நிறைவைக்காணும் துர்க்காபுரம் மகளிர் இல்லம்



*படமாடக் கோயில் பரமர்க் கொன்றீயில்*
*நடமாடும் கோயில் நம்பர்க் கங்காகும்*
*நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்*
*படமாடும் கோயில் பரமர்க் கங்காமே.*

என்கிறார் திருமூலநாயனார். இத் திருமந்திரச் செய்யுளுக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் அமையப்பெற்றது துர்க்காபுரம் மகளிர் இல்லம். இதனை ஆரம்பித்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் இன்று நம்மிடையே இல்லை. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை வளர்த்து எடுப்பதில் தமது வாழ்நாளில் 26 ஆண்டுகள் ஏழைப் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிப் பணிக்கு முழு நேரப் பணியாக அர்ப்பணித்தவர் சிவத் தமிழ்ச் செல்வி அம்மா. நாவலர் பெருமான் கல்விக்குத்தான் முதன்மை அளித்தவர். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும் கல்வி வளர்ச்சிக்குத் தான் பெருந்தொண்டு ஆற்றியவர்.

சென்னை சைவசித்தாந்த சமாஜம் தனது பவளவிழாவை 1981ஆம் ஆண்டு மே மாதம் 8, 9 ,10 ஆகிய திகதிகளில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்றலில் வெகு சிறப்பாக கொண்டாடியது. பவளவிழாவின் பூர்த்தி நாளில் சைவ சித்தாந்த மணம் கமழும் அறிஞர் பெருமக்களின் சிந்தனையில் உருவாகியது தான் ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்குரிய இல்லமாகும். "ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற கருத்துக்கு அமைவாக 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி தைப்பூச நன்னாளில் இவ்வில்லம் ஆரம்பிக்கப்பெற்றது. ஆரம்பத்தில் 9 பிள்ளைகள் தான் சேர்ந்தனர். இன்று வன்னிப் பெருநிலத்தில் இடம்பெற்ற யுத்தப் பேரவலத்தில் சிக்குண்டு தவித்த பெண் பிள்ளைகளுமாக 109 பேர் உள்ளனர்.

இல்லப் பிள்ளைகள் அனைவரும் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருந்து தங்களுக்குப் பின்னர் சேருகின்ற பிள்ளைகளை அரவணைத்தும் வழிகாட்டிகளாகவும் இருந்து வருகின்றனர். இல்லப்பிள்ளைகளில் பெரும்பாலானோர் சைவப் பெருவள்ளல் சேர்.பொன் இராமநாதன் ஸ்தாபித்த இராமநாதன் கல்லூரியிலும் மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்கின்றனர். மேற்படி கனிஷ்ட வித்தியாலயம் சிவத் தமிழ்ச் செல்வி அம்மா கல்வி கற்ற பாடசாலையாகவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அம்மையார் ஆற்றிய பணிகளுக்கும் சைவத்தமிழ் உலகு ஆற்றிய அளப்பெரிய பணிகளுக்கும் நன்றி பாராட்டும் முகமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பெயர் மாற்றப்பட்டது.

இங்கு சிவத்தமிழ்ச் செல்வி அம்மா வளர்த்தெடுத்த மகளிர் இல்லப் பிள்ளைகள் கற்று வருவது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இன்று மகளிர் இல்லப்பிள்ளைகள் கல்வியில் உயர்நிலை அடைந்து பல்கலைக் கழகப் பட்டதாரிகளாக வெளிவந்துள்ளனர். இவர்கள் ஆசிரியர்களாகவும் அரச அலுவலக பணியாளர்களாகவும் பணியாற்றுகின்றமை பாராட்டுதற்குரியது.

இவ் இல்லம் யுத்த அனர்த்தங்களால் பல்வேறுபட்ட பாதிப்புகள் அடைந்து, இடம் பெயர்ந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கைதடியிலும் உசன் கந்தசுவாமி கோயில் வளாகத்திலும் தமது பணியை ஆற்றிய காலம் மறக்கமுடியாதது. சிவத்தமிழ்ச் செல்வி அம்மா தமது உயிரையே பொருட்படுத்தாது மெழுகுவர்த்தி போல தாமே உருகி இல்ல பிள்ளைகளை காப்பாற்றிய பெருமை அவர்களையே சாரும்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை முன்னேற்றி வளப்படுத்திய பணிகள் அனைத்தும் வரலாற்றுப் பதிவாகவுள்ளது. தமது பணிகளின் போது நிர்வாக சபையினரையும் இல்லப் பிள்ளைகளையும் அன்பாக வரழைத்து,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

என்ற திருவள்ளுவத்தின் வழியில் நின்று 26 ஆண்டுகள் மகளிர் இல்லத்தை நிர்வகித்து வெற்றி கண்டவர். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் ஈடு செய்ய முடியாத இழப்பிற்குப் பின் இன்று 28ஆவது விழாவை துர்க்காபுரம் மகளிர் இல்லம் கொண்டாடு கிறது. அம்மையாரின் தர்மப்பணிகள் என்றுமே எங்கள் அனைவரையும் வழி நடத்தும். துர்க்கை அம்பாளின் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

*கா.சிவபாலன்.*

## தபால் மூல வாக்களிப்பிற்கு அதிகளவானோர் விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் 8 ஆயிரத்து 303 வாக்காளர்கள் விண்ணப்பித்துள்ளதாக யாழ். தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் 7 ஆயிரத்து 482 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 821 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன.

இவ் விண்ணப்பங்கள் அனைத்தும் யாழ். மாவட்டத்தில் 143 அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மூலமும் வெளிமாவட்டங்களிலிருந்து 119 அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் எனவும் தபால் மூலம் வாக்களிப்பதற்காக தயாரிக்கப்படவுள்ள வாக்காளர் இடாப்புக்கள் எதிர்வரும் 10ஆம் திகதி கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அத்துடன் தபால் மூல வாக்களிப்பிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் மூலம் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் அந்தந்த திணைக்களத்தைச் சேர்ந்த உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(6-30)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.03.2010

(C-4527)

## ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கான கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் நாளை

(கொழும்பு)

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை நடைபெறவிருக்கின்றது.

வெளி மாவட்டங்களில் பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆளும் கட்சியின் சகல உறுப்பினர்களையும் கொழும்பிற்கு திரும்பி இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் பங்கேற்கும் அதேவேளை நாளை மறுதினம் கட்டாயமாக மன்றிலிருக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்ற அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே மன்றில் பிரசன்னமாய் இருக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபைக்கு வருகை தந்து சபையமர்வில் பங்கேற்குமாறு பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகத்தினால் சகல உறுப்பினர்களுக்கும் கடந்த 3ஆம் திகதி கடிதம் மற்றும் தந்தி மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்ட பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள பிரகடனம் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகத்திற்கு கிடைத்ததை அடுத்தே சபையமர்வில் பங்கேற்குமாறு சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (2-6)

## ஆள் அடையாள அட்டை தொடர்பான அறிவுறுத்தல்கள்

### தேர்தல் உதவி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது

பாராளுமன்றத் தேர்தலிற்கு வாக்களிப்பதற்கு வழமைபோல் ஆள் அடையாள அட்டை கட்டாயம் தேவையெனவும் அடையாள அட்டை வைத்திருக்காதோருக்கு தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்க தேர்தல்கள் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான அறிவுறுத்தல் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளரினால் பிரதேச செயலாளர் ஊடாக கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் நிலையிலுள்ள கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை அல்லது அண்மையில் ஜனாதிபதி தேர்தலுக்கு வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை இல்லாதோர் தமது பகுதி கிராம சேவை உத்தியோகத்தரை அணுகி தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான புகைப்படம் இலவசமாக எடுப்பதற்குரிய ஒழுங்கு கிராம சேவை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும். தேசிய அடையாள அட்டைக்கு இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண் டும்.

ஏற்கனவே தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களும் இதுவரை தேர்தல் அடையாள அட்டை கிடைக்கப்பெறாவிடில் இந்த தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(29-2-4)

## வடக்கு நீதிமன்றக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண நடவடிக்கை

### மிலிந்த மொரகொட தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு நீதிமன்றக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடு களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட தெரி வித்துள்ளார்.

இதன்படி தற்போது வடக்கு நீதிமன்றக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமானசிங்கம் தலைமையிலான விசேட குழுவினர் வடக்கு நீதிமன்றக் கட்டமைப்பு தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இதில் உட்கட்டுமான வசதிகள், பணியாளர் பற்றாக்குறை போன்ற சகல விடயங்கள் தொடர்பிலம் கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)



நெஸ்டமோல்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்திய மினி மரதன் ஓட்ட நிகழ்வு நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது. மரதன் ஓட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் பாடசாலை மட்டத்தில் முதல் இடம்பெற்ற மாணவிக்கு மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கேடயம் வழங்குவதையும் திறந்தபிரிவில் முதல் இடம் பெற்றவர்களையும் கொரிய நாட்டு விருந்தினரின் கராத்தே பயிற்சி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# நெஸ்டமோல்ட் அனுசரணையில் நடந்த மினி மரதனில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்

(யாழ்ப்பாணம்)

நெஸ்டமோல்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நேற்று நடத்திய மினி மரதன் ஓட்டப் போட்டியில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கு பற்றினர்.

இதில் பாடசாலை மட்ட ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மாணவன் எம்.தினேஷும் பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவி எஸ்.மயூரியும் முதலிடத்தைப் பெற்றனர்.

அத்துடன் திறந்த மட்ட ஆண்கள் பிரிவில் கே.ஜெயந்தனும் பெண்கள் பிரிவில் என். மேசியும் முதலிடத்தைப்பிடித்தனர்.

நெஸ்டமோல்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மெய்வல்லுனர் சங்கம் நடத்திய மினி மரதன் ஓட்டப் போட்டி நேற்று மாலை 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இதில் பாடசாலை மட்டம், திறந்த மட்டம் என இரண்டு மட்டங்களில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளாக நடத்தப்பட்டது.

இதற்காக நேற்றுப் பிற்பகல் வரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருந்தனர் .

எனினும் பதிவு செய்தவர்களைவிட மேலதிகமாக வந்தவர்களும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் ஆரம்பமான போட்டிகளில் 5 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பொலிஸார் இராணுவத்தினரின் வீதி ஒழுங்குபடுத்தல்களுடன் மிக நீண்ட வரிசையில் வீரர்கள் மினி மரதன் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதில் பாடசாலை மட்ட ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மாணவன் என்.தினேஷ் (வயது 19) 39 நிமிடங்கள் 4 விநாடிகளில் தூரத்தைக்கடந்து முதலிடத்தையும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் ஏ.ஜீவன்ராஜ் (வயது 18) தூரத்தை 40 நிமிடங்கள் ஒரு விநாடிகளில் ஓடி முடித்து இரண்டாமிடத்தையும் வல்வெட்டித்துறை விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவன் பி.ஜசிகன் 40 நிமிடங்கள் 5 விநாடிகளில் தூரத்தைக்கடந்து 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

பாடசாலை மட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவி எஸ்.மயூரி (வயது 16) முதலாமிடத்தையும் அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மாணவி ரேவதி இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

திறந்த மட்ட ஆண்கள் பிரிவில் கே.ஜெயந்தன் முதலாமிடத்தையும் எஸ்.ஜெகதீஸ்வரன் இரண்டாமிடத்தையும் பெண்கள் பிரிவில் என்.மேசி முதலாமிடத்தையும் என்.சுமதி இரண்டாமிடத்தையும் எஸ்.அனுசியா மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

நீண்டகாலத்திற்கு பின்னர் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற வடமாகாண மட்ட பெரும் மரதன் ஓட்டம் என்பதால் ஆயிரக்கணக்கான வீர, வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் வீதிகளில் ரசிகர்கள் கூடி நின்று போட்டியாளர்களுக்கு உற்சாகம் அளித்தனர்

# டக்-வேத் லூயிஸ் முறையில் ஆஸி. வெற்றி; இறுதிவரை போராடிய நியூசிலாந்து சோகம்



(அக்லாண்ட்)

இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை போராடி வீழ்த்தியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 இருபது-20, 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று அக்லாண்டில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வைற்-ஹசியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 273 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கல் ஹசி 63 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 56 ஓட்டங்களையும் வைற் 60 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் ஹடின் 62 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 53 ஓட்டங்களையும் வோட்சன் 47, ஹோப்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பொண்ட், அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிராவ்லின், தௌப்பி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 274 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 43 ஓட்டங்களை எடுத்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் சில நிமிடங்களில் மழை விட ஆட்டம் ஆரம்பமாகிய போதும் மீண்டும் மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந் நிலையில் அரை மணி நேரத்தின் பின் மழை விட ஆட்டம் ஆரம்பமாகிய போது டக்-வேத் லூயிஸ் முறையில் நியூசிலாந்து அணிக்கு வெற்றியிலக்காக 45 ஓவர்களில் 266 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 32.4 ஓவர்களில் 176 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் களமிறங்கிய அணித்தலைவர் டானியல் விக்டோரி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இறுதிவரை போராடிய போதும் 43.2 ஓவர்களில் 253 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 49 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 70 ஓட்டங்களையும் ஸ்ரைரிஸ் 58 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் ஹோப்கிங்ஸ் 35, மக்குலம் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 4 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் வோட்ஷன் 2 விக்கெட்டுக்களையும் ஹயூரிச் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சிறப்பாக ஜொலித்த நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி தொடரை 1:0 என்ற கணக்கில் சமனிலை செய்தது.

# ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூன்...

பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்களுக்கு எந்த வகையிலேனும் இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் தான் எந்தக் குற்றமும் புரியவில்லை என இலங்கை அரசு கூறியுள்ளது. இலங்கையில் போர் உச்சக்கட்டத்தை அடைந்த காலப் பகுதியில் இலங்கை அரசாங்கத்தினாலும் விடுதலைப்புலிகளாலும் போர்க் காலக் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பான் கீ மூன் குறிப்பிடத்தக்க அளவு மென்மையான இராஜதந்திரப் போக்கைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை இராணுவத்தினர் நிராயுத பாணிகளாக உள்ளவர்களைச் சுட்டுக் கொல்வதாக வெளியாகிய வீடியோக் கட்சிகள் குறித்துப் பக்கச்சார்பற்ற சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சட்டத்திற்குப் புறம்பான கொலைச் சம்பவங்கள் தொடர்பான ஐ.நாவின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்ரன் கோரிக்கை விடுத்திருந்த போது, அல்ஸ்ரன் சுதந்திரமாகச் செயற்படுவதாக ஐ.நா. செயலர் தெரிவித்திருந்தார்.

ஐ.நா. செயலர் பான் கீ மூன் இலங்கை தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்படுவதாக அறிவித்த கையோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நா. செயலரின் இத்திட்டம் நியாயமற்றது எனவும் எதுவித அடிப்படையற்றது எனவும் விமர்சித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் போரினால் பாதிக்கப்பட்ட மற்ற நாடுகள் தொடர்பில் எடுக்கப்படவில்லை எனவும் இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சில அரச சார்பற்ற நிறுவனங்களாலும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களினாலுமே சுமத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அரசு துறை செயலகத்தினால் கடந்த ஒக்டோபரில் பட்டியல் படுத்தப்பட்டுள்ள உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கையில் ஏற்கனவே குழு வொன்று ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மூன்று தசாப்தங்கள் நீடித்த இனப்பிரச்சினை போல் இங்கு மனித உரிமைகளுக்குப் பெரும் சாபக்கேடாகியுள்ள நிலையில் இப் பிரச்சினைகள் குறித்துக் கேள்விகள் எழுப்பப்படும் போதெல்லாம் தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசுகளைப் போலவே அதிகளவில் உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினையாற்றுகின்றது.

இலங்கையில் இடம்பெற்றிருக்கக் கூடிய போர்க் காலக் குற்றங்கள் தொடர்பில் பதில் அளிக்கக் கூடிய வகையில் அரசாங்கம் நட வடிக்கை எடுக்கும் என ஐ.நாவும், இலங்கை அரசும் கடந்த மே மாதத்தில் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அரசாங்கம் அதன்படி செயற்பட வில்லை என இலங்கை அரசு மீது விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ந-14)


யாழ். மாவட்ட கேபிள் TV இயக்குனர் சங்கம்

அவசர கலந்துரையாடல்

இடம்: JAFFNA TECHNICAL INSTITUTE
CLOCK TOWER ROAD
(பெருமாள் கோவில் வீதி), யாழ்ப்பாணம்.

நேரம்: 09.03.2010 மாலை 3.00 மணி

எமது சங்கத்திற்கு கேபிள் TV இயக்குவதற்குரிய அனுமதிப் பத்திரம் கிடைக்கும் ஏது நிலை உருவாகி இருப்பதால் அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் உங்கள் ஏரியா, சங்கத்தில் உங்கள் அங்கத்துவம் என்பன உறுதி செய்ய வேண்டியுள்ளதாலும் அன்றைய தினம் மேன்மை தங்கிய அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அனைவரையும் மாலை 5 மணிக்கு சந்திக்க நேரம் ஒதுக்கி தந்துள்ளமையாலும் தவறாது சங்க கூட்டத்திலும் அமைச்சருடனான சந்திப்பிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு: 0777710785, 0718561654, 0775284689

(கி-4612)

அடுத்த பிரிவு ஆரம்பம்:-10.03.2010

Grammar. Speaking & Pronunciations..Reading. .Listening......Writing... ... Vocabulary.....etc

Free Audio CD & Handouts

அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்

SPOKEN ENGLISH 2-3 Months

DIPLOMA IN ENGLISH

ISO CERTIFIED CERTIFICATE வழங்கப்படும். T.P.: 077 6642432

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். Tel:-0774032051

INTERNATIONAL CITY COLLEGE PVT LTD

NO 21, Stanly Road (People bank Lane), JaffnaTel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com.

Impossible is nothing Experience the different


## பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்க...

ஆலோசகர்லியான்பொக்ஸின் அறிக்கை குறித்து நடவடிக்கை எடுப்பதில் ஐ.நா தோல்வியடைந்தமை ஆகியன குறித்து இன்னர் சிற்றி பிரஸ் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லியான் பொக்ஸ் அடுத்த வாரம் இந்தியாவுக்கும், நேபாளத்திற்கும் விஜயம்செய்யவுள்ளார்.ஆனால்அவர் இலங்கைக்கு செல்லவில்லை.

மார்ச் 4ஆம் திகதி இரவு ஐ. நாவுக்கான பிரெஞ்சுத் தூதுவர் ஜெரார்ட் அருட்டிடம் இலங்கை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஏன் தயங்குகிறார் எனக் கேள்வியெழுப்பியது இன்னர் சிற்றி பிரஸ்.

அங்கத்துவ நாடுகளின் அழுத்தமே அவர் இவ்வாறு தயங்குவதற்குக் காரணம் என அவர் அதற்குப் பதிலளித்தார்.

இந்தியாவை முதலிலும் பின்னர் சீனாவையும் அவர் குறிப்பிட்டார்.இலங்கையின் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ராஜபக்ஷ அரசாங்கத்தின் இராணுவநடவடிக்கை ஊடாகபயங்கரவாதம்முறியடிக்கப்பட்டதனை பிரான்ஸ் வரவேற்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இறுதி யுத்தத்தில் இரத்த ஆறு ஓடியது என்று ஐ.நா. தெரிவித்ததைத் தொடர்ந்து 2009 மே இல் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்து தமிழர்களுடனான இணக்கப்பாடு மற்றும் போர்க்குற்றங்கள் விசாரணை தொடர்பான குறித்து அறிக்கையிட்ட போதும் பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையில் நடைபெற்றதாகக் கருதப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச பிரதிநிதிகள் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும் என ஐ.நாவுக்கான விஷேட பிரதிநிதி பிலிப் அன்டர்சன் பான் கீ மூனைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையும் இவ்விசாரணை உள்ளடக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

பான் கீ மூனின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் வெள்ளைக் கொடியுடன் சரணடைபவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அங்கு சென்றிருந்தார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம தனது மகனுக்கு ஐ.நாவில் வேலை ஒன்றைப் பெற்றுத் தருமாறு ஐ.நாவின் உயர் அதிகாரி ஒருவருக்கு (அது நம்பியார் எனக்கண்டறியப்பட்டுள்ளது).கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளமை பற்றி மார்ச் 5 ஆம் திகதி மார்ட்டினிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேட்டதற்கு தான் அது பற்றி விசாரிப்பதாகச் சொன்னார்.

அது மட்டுமன்றி இந்த நிபுணர்கள் குழு பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குமே தவிர இலங்கைக்கு அல்ல என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். (ந-5)





தமிழ் மக்கள்
துயர் தீர்க்க
மகேஸ்வரன் பாதையில்...

திருமதி விஜயகலா மகேஸ்வரன் 8

நடராஜா சண்முகவேல் JP
(லயன் கழகத் தலைவர்,பிரபல வர்த்தகர்) 2

X

யானைக்கு வாக்களிப்போம்! ஜனநாயகத்தை மீட்டெடுப்போம்!!
ஐக்கிய தேசியக் கட்சி

(909)


## சரத்திற்கு...

ளுடன் கூடிய அறிக்கை தற்போது தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியமளித்தவர்களுள் பொதுமக்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவித்தார். (ந-5)


யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக !!!

கணனி வரை கலை தொழில் நுட்ப கற்கைநெறி ஆரம்பம் - Online Class

Advanced Diploma in Adobe Illustrator

இக் கற்கை நெறியானது சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியை கற்ற, கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் மற்றும் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ள கற்கைநெறி !!!

இந்தியாவில் இருந்து வருகை தரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
- காலம் 2 மாதங்கள் -

பதிவுகளை :- 10/03/2010 முன்னர் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


## கூட்டமைப்...

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

2002ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோ இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டுடன் கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்திற்கும் இணங்கப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. (ந-5)

## பிரபாகரனின்...

இலங்கையில் இருந்து பயணமாகியுள்ளார்.

இவரின் பயண ஒழுங்குகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய சிவாஜிலிங்கம் ஒழுங்கு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2010
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
வலி தந்தாரை தோற்கடிப்போம்—நம்
விதி.வெல்ல.வாக்களிப்போம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிவஞானம் சிறீதரன் கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்

X
10 X



TCN EXPRESS INTERNATIONAL

உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.